Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 18 சுபகிருது வருடம், ஆனி மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(15.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 15, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50





## ஜனாதிபதி பதவியை ஏற்பதற்குத் தயார்

### பொன்சேகா அறிவிப்பு

02 பக்கம்

# கோட்டா இராஜினாமா

## கடிதம் அனுப்பிவைப்பு



### பதில் ஜனாதிபதியாக ரணில்

### உத்தியோகபூர்வமாக பதவியேற்க ஏற்பாடு

02 பக்கம்



நாடாளுமன்ற வீதியில் இராணுவ கவச வாகனங்கள் நேற்று ரோந்துப்பணியில் ஈடுபட்டபோது.

(படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே)

## கோட்டாபயவுக்கு எப்படி முக்கியத்துவமளித்தீர்கள்?



### விளக்குமாறு மாலைதீவு நாடாளுமன்றத்தில் பிரேரணை

02 பக்கம்

## நாட்டிலிருந்து இன்றுவரை வெளியேற மாட்டோம்

### மஹிந்த, பெசில் உயர்நீதிமன்றத்தில் அறிவிப்பு



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆட்டிகல ஆகியோர் இன்று (15) வரை வெளிநாடுகளுக்கு பயணிக் கப் போவதில்லை என உயர் நீதிமன்றத் திற்கு நேற்று அறிவித்துள்ளனர்.

02 பக்கம்



## இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### சுப்ரமணியம் சுவாமி தெரிவிப்பு

02 பக்கம்

## கோட்டாவை கைதுசெய்ய நடவடிக்கை எடுங்கள்

### பிரிட்டன் அரசை வலியுறுத்தும் லிபரல் டெமோக்ரட் கட்சித் தலைவர்



02 பக்கம்

## 18 ஆம் திகதி முதல் தொடர் போராட்டம்

### கூட்டுத் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி கோட்டா மற்றும் கோட்டாவினால் நியமிக்கப்பட்ட ரணிலையுமே முழு நாட்டு மக்களும் பதவி விலகுமாறுக் கோரினர்.

இந்த நிலையில், தொழிற்சங்க கூட்டு சம்மேளனமானது, வேலைநிறுத்தம் மற்றும் ஹர்த்தால் போன்ற செயற்பா டுகளை முன்னெடுக்க எதிர்பாத்துள்ள போது, ரணில் விக்ரமசிங்க, ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்துகின்றார்.

எனினும், ரணில் விக்ரமசிங்கவின் ஊரடங்கை நாங்கள் உடைத்து, 18ஆம் திகதிமுதல் மீண்டும் போராட்டத்தை முன்னெடுப்பதாக... 02 பக்கம்

## அனைத்து தரப்பினரும் இணக்கமாகச் செயற்படுக!



### ஐ.நா. செயலர் வலியுறுத்து

அனைத்து தரப்பினரும் இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் நாயகம் அன்டானியோ குட்டாரஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

அனைத்து அரசியல் கட்சிகளும் இணக்கப்பாட்டுடன் சமாதானமான முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்ட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் அரசியல் நெருக்கடி நிலைமை குறித்து, அவர் இவ்வாறு கருத்து வெளியிட் டுள்ளார். 02 பக்கம்

## இராணுவத்தினரின் துப்பாக்கிகள் ஆர்ப்பாட்டக்காரர்களால் பறிமுதல்

### மக்கள் கவனத்துடன் செயற்படவேண்டுமென்கிறது இராணுவம்

நாடாளுமன்றத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட் டக்காரர்கள் இராணுவத்தினரை கொடூரமான முறையில் தாக்கியதாகவும், அவர்களிடம் இருந்து இரண்டு தானியங்கி T-56 தாக்குதல் துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளுடன் எடுத்துச்சென்றதாகவும் இராணுவம் நேற்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற சுற்றுவட்டத்திலும் அதைச்சுற்றியும் வன்முறையில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களால் இரண்டு இராணுவ வீரர்கள் கொடூரமான முறையில் தாக்கப் பட்டு, அவர்களது ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருட்கள் திருடப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார். இந்த திருடப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி வன்முறைகள் பரவக்கூடும் என்பதால், பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நேற்று ஆர்ப்பாட்டக்காரர்க ளுடனான மோதலின்போது குறைந்தது 16 இராணுவத்தினர் காயமடைந்து, இராணுவ மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வருவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

### உஷ்



சரத் பொன்சேகா ஜனாதிபதி பதவியைப் பெற எதிர்க்கட்சிகளின் தலைவர்களிடம் விடுத்த கோரிக்கை வெற்றியளிக்கவில்லையாம். அனைவரும் கைவிரித்து விட்டதால் பேசாமல் ரணிலிடம் நேரடியாக பேசி, அவருடன் சேர்ந்து இயங்கலாம் என்று கருதுகிறாராம் பொன்சேகா. நேற்று ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் 11 அரசியல் கட்சிகள் நடத்திய கூட்டத்தில் சஜித்தை ஜனாதிபதியாகவும், டலஸ் அழகப்பெருமவை பிரதமராகவும் நியமிக்க முடிவாகியிருப்பதாக தகவல்.

## ஜனாதிபதி மாளிகை ஆக்கிரமிப்பு

### நேற்றுடன் முடிவுக்கு வந்தது

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி, கடந்த 9ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட் டத்தின்போது, போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டு, 5 நாட்களாக மக்கள் வசமிருந்த ஜனாதிபதி மாளிகை பாதுகாப்பு தரப்பினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தின்போது, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகை போன்ற போராட் டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

போராட்டத்தின்போது கைப்பற் றப்பட்ட... 02 பக்கம்

## சட்டம் ஒழுங்கை மீறினால் கடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்

### போராட்டக்காரர்களுக்கு இராணுவம் விடுத்துள்ள எச்சரிக்கை

நாட்டின் தற்போதைய நிலைமைகளை உணர்ந்து பொறுப்புடன் செயற்படுமாறு இலங்கை இராணுவம் பொதுமக்களை அறிவித்துள்ளது. இது தொடர்பில் இராணுவம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசியலமைப்பின்படி ஆயுதப்படை மற்றும் காவல்துறை உறுப்பினர்களுக்கு, நாட்டின் சட்டம் மற்றும்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

கூடாரத்துக்குள் ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த கதையாப்போச்சுது ரணிலுக்கு பிரதமர் பதவி கொடுத்தது...



## கோட்டாவை கைதுசெய்ய...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்வதற்கான பிடியாணையை பிறப்பிக்க பிரிட்டன் அரசாங்கம் தனது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து செயல்படுமாறு பிரித்தானியாவின் லிபரல் டெமோக்ரட் கட்சியின் தலைவர் எட் டேவி கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசிய எட் டேவி, ராஜபக்ஷ அரசின் ஊழல், வரிக் குறைப்பு, பாதுகாப்புச் செலவினங்கள், கொடூரமான காவல்துறை அதிகாரங்கள் போன்றவற்றால் இலங்கையில் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இலங்கை மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் பொருளாதார மற்றும் அரசியல் தீர்வொன்றை ஐக்கிய இராச்சிய அரசிடம் கோரியுள்ளார்.

லிப் டெம் தலைவர் மேலும் கூறுகையில்,

அரசியல் பொதிக்கு கூடுதலாக பொருளாதாரப் பொதியை வழங்க இங்கிலாந்து அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற பங்காளிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

பிரித்தானியாவின் லிபரல் டெமோக்ரட் கட்சியின் தலைவர் எட் டேவி, தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர் உட்பட நாட்டில் உள்ள அனைவரின் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று கருதுகிறார்.

# குருந்தூர் மலை சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுக!

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குருந்தூர் மலையில் சட்டவிரோதமாக நிறுவப்பட்டுள்ள அனைத்துக் கட்டுமானங்களையும் அகற்றுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் 16ஆம் திகதி குருந்தூர்மலை தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கினை நகர்த்தல் பத்திரப்படி, ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய கட்டளையினை மதிக்காமல் அவமதிப்புச் செய்து, அங்கு அமைக்கப்பட்ட விகாரை தொடர்பிலும், பொலிஸார் தொடர்ச்சியாக இந்த வழக்கில் நீதிமன்றிற்கு வழங்கவேண்டிய அறிக்கைகளை வழங்காது, சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு சார்பாகச் செயற்பட்டதையும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் மன்றில் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

### நீதிமன்றம் உத்தரவு

அதன் தொடராக தவணையிடப்பட்ட வழக்கு விசாரணைக்கான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

இதன்போது சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை உட்பட்ட கட்டுமானங்களை அகற்றுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

ஆலய நிர்வாகம், து.ரவிகரன் சார்பில் சட்டத்தரணி வி.எஸ்.தனஞ்சயன் முன்னிலையாகி யிருந்தார்.

## அனைத்து தரப்பினரும் ...

இலங்கையின் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், போராட்டக்காரர்களின் மெய்யான கோரிக்கைகள், பிரச்சினைகளுக்கான மூல காரணங்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதென ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் அன்டானியோ குட்டாரஸ் தெரிவித்துள்ளார்.

## கோட்டா இராஜினாமா...

ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்யும் இராஜினாமா கடிதத்தைகோட்டாபய ராஜபக்ச , சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு நேற்றிரவு அனுப்பிவைத்துள்ளார்.

மாலைதீவிலிருந்து நேற்று சிங்கப்பூர் சென்ற ஜனாதிபதி அங்கு தரையிறங்கியதும் தன்னுடைய இராஜினாமா கடிதத்தை இவ்வாறு சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ளார்.இதனையடுத்து பதில் ஜனாதிபதியாக ரணில் இன்று காலை பதவியேற்க ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றம் இன்று காலை கூடவிருந்தபோதும் அது காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய இராஜினாமா கடிதத்தை நேற்றிரவேஅனுப்பியதன் காரணத்தினால் சபை அமர்வை இன்று திட்டமிட்டபடி நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாலைதீவில் இருந்து நேற்று சிங்கப்பூர் நோக்கி சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை நேரப்படி சிங்கப்பூருக்கு மாலை 5.30 மணியளவில் சென்றார். அவர் சிங்கப்பூரில் சில மணிநேரம் தங்கியிருந்து மத்திய கிழக்கு நாடொன்றுக்கு செல்லவுள்ளார்.சிங்கப்பூரில் கோட்டாவுக்கு அரசியல் அடைக்கலம் கொடுக்கப்படவில்லையென்றும் அது அவரின் தனிப்பட்ட பயணமென்றும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது.

கட்சித் தலைவர்கள் கூட்டம்

இதேவேளை கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தைஇன்று (15) நடத்துமாறு எதிர்க்கட்சி, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் நேற்று முற்பகல் கூடி கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

தேசிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபித்து பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கு பெயரை பரிந்துரைக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் அறிவித்தல் விடுத்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றை நடத்தி தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார். இதேவேளை ஜனாதிபதியின் இராஜினாமா குறித்த சபாநாயகரின் அறிவிப்பு இன்றைய தினம் வெளிவர உள்ளது.

## கோட்டாபயவுக்கு எப்படி...

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மாலைதீவு அரசாங்கம் எப்படி வரவழைத்தது என்பதை தெளிவுபடுத்துமாறு கோரி மாலைதீவு தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளதென அந்நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் துன்யா மஹ்மூன் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு அரசாங்கம் எப்படி இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டுக்கு அழைத்து வர அனுமதித்தது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். நாடாளுமன்றத்தில் பிரேரணையை கொண்டுவருவது மிகச்சிறந்த நடவடிக்கையாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளேன். இலங்கை மக்களின் அபிலாஷைகளை மதிக்கின்றோம்

இலங்கை பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக நெருக்கடிகளை சந்தித்துள்ளது. மக்கள் தொழில், உணவு, எரிபொருள் இன்றி வாழ்க்கையை கொண்டு நடத்தமுடியாமல் இருக்கின்றனர். இலங்கை மக்களின் அபிலாஷைகளை மாலைதீவு மக்கள் மதிக்கின்றனர். அவர்கள் தற்போதைய அரசாங்கத்தை மாற்ற வேண்டும் என்பதற்காக செயற்பட்டு வருகின்றனர்.

அதனை நாம் உணர்வுபூர்வமானதாக கருதவேண்டும். இலங்கை மக்கள் தமது எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் துன்யா மஹ்மூன் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி பதவியை ...

யோ.தர்மராஜ்

ஐக்கிய மக்கள சக்தியின் சம்மதத்துடன் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு அழைப்பு விடுத்தால் ஜனாதிபதியாக பதவியேற்கத் தயார் - என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி நாட்டை கைவிட்டுச் சென்றுள்ளார் எனக் கருதினால், அதன் உரிய தீர்வுகளை முன்னெடுப்பதற்கான சூழ்நிலை உருவாகும் என சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால், அரசியலமைப்பு பிரச்சினைகள் ஊடாக அனைவரின் கழுத்தையும் இறுக்கியுள்ளனர். அனைத்து பிரச்சினைகளும் அரசியலமைப்புக்கு உட்பட்டே இடம்பெற்றுள்ளன.

எனவே, முழு நாட்டு மக்களும் ஜனாதிபதி நாட்டை கைவிட்டுச் சென்றுள்ளார் எனக் கருதினால், ஒரு கடதாசியை பிடித்துக் கொண்டிருக்காது, நீதிமன்றத்தின் ஊடாக சரி உரிய தீர்மானங்களை எடுத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதனை உடனடியாக செய்ய வேண்டும்.

இந்நிலையில், ரணில் விக்ரமசிங்கவையும் அவர் 25 வருடங்களாக தலைமைத்துவம் வகிக்கும் கட்சியையும் மக்கள் நிராகரித்துள்ளனர். அவர் எவ்வாறு நாடாளுமன்றத்திற்குள் வந்தார் என்பதும் அனைவருக்கும் தெரியும். ஒரே ஒரு உறுப்பினரை பிரதமராக்கி, ஜனாதிபதியாக்குவதன் ஊடாக இந்த நாட்டின் அரசியல் கலாசாரம் எந்தளவு சீர்குலைந்துள்ளதென்பது தெளிவாகின்றது. 69 இலட்சம் வாக்குகள் பெற்றவர் விரட்டியடிக்கப்பட, 25 ஆயிரம் வாக்குகள் பெற்றவர் ஜனாதிபதியாகின்றார். இவை ஏனைய நாடுகளில் இடம்பெறாது.

அனைத்து அரசியல் கட்சிகளிலும் மாற்றங்கள் வேண்டும் என சிந்திப்போர் இருக்கின்றனர். அடுத்த ஜனாதிபதியாக கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவை நிறுத்த வேண்டும் என்ற யோசனையை கட்சியிலுள்ள அனைவரும் உறுதிபடுத்தினர். இதற்கிடையில், பலரும் ஜனாதிபதியாக வேண்டும் எதிர்பார்த்துக்கொண்டு, பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். மொட்டுடன் கூட பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். ஆனால், யார் என்றாலும் நாட்டின் சூழ்நிலையை புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள சக்தியின் சம்மதத்துடன் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு அழைப்பு விடுத்தால் ஜனாதிபதியாக பதவியேற்கத் தயார். பெரும்பான்மையினோரின் நிலைப்பாட்டுக்கு நான் மதிப்பளிப்பேன். ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்குமாறு பொதுஜன பெரமுன தரப்பிலிருந்து தமக்கு தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கின்றனர் – என்றார்.

## நாட்டிலிருந்து இன்றுவரை...

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுவின் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகளூடாக இதற்கான உறுதிமொழி சமர்ப்பிக்கப்பட்டது.

மனுவின் மற்றுமொரு பிரதிவாதியான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் லக்ஷ்மன் சார்பில் சட்டத்தரணி மன்றில் ஆஜராகாமையால், அவருக்கும் இன்றுவரை வெளிநாடு செல்ல தடை விதித்து உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குறித்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூறவேண்டிய நபர்களுக்கு எதிராக விசாரணையை மேற்கொள்ள உத்தரவிடுமாறு கோரி, இலங்கை வணிக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன உள்ளிட்ட தரப்பினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 18ஆம் திகதிமுதல் தொடர்...

தொழிற்சங்க கூட்டு சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டா மற்றும் கோட்டாவினால் நியமிக்கப்பட்ட ரணிலையுமே முழு நாட்டு மக்களும் பதவி விலகுமாறு கோரினர். இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பியோடியதும், நாடாளுமன்றத்திலிருந்த ரணில் ஜனாதிபதி மாளிகைக்கு பாய்வதற்கே பார்த்துக்கொண்டிருக்கின்றார்.

அரச, தனியார், அரச சார்பற்ற மற்றும் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த ஆயிரம் தொழிற்சங்களைக்கொண்ட தொழிற்சங்க கூட்டு சம்மேளனமானது, கோட்டா – ரணிலை விரட்டும் போராட்டத்தில் தொடர்ந்து அங்கம் வகித்தது.

மே மாத ஹர்த்தாலின் ஊடாகவே மஹிந்த உள்ளிட்ட அரசாங்கத்தை விரட்டினோம். போராட்டக்காரர்கள் போராட்டத்தில் குதித்தபோது, முழு நாட்டிலும் ஹர்த்தாலை முன்னெடுத்தே அரசாங்கத்தை விரட்டியடுத்தோம். இந்நிலையில் முழு நாட்டு மக்களும் இணைந்து கோட்டாவை கடல் கடந்து விரட்டியடித்தனர். இனி அவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நாட்டிலுள்ள பிரச்சினைகள் தீர்ந்து நாடு சாதாரண நிலைமைக்கு வரும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர். தொழிற்சங்க சம்மேளமானது, வேலைநிறுத்தம் மற்றும் ஹர்த்தால் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். ஆனால், தற்போது ரணில் விக்ரமசிங்க, ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்துகின்றார். எனினும், ரணில் விக்ரமசிங்கவின் ஊரடங்கை நாங்கள் உடைப்போம். ஊரடங்கை உடைத்து, இலட்சக் கணக்கான மக்களை வீதிக்கு கொண்டுவருவோம்.

நடைமுறையிலிருக்கும் சட்டத்திற்கு எதிராக செயற்படுவதே ஹர்த்தாலாகும். எனவே, முழு நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஊரடங்கை அமுல்படுத்தி எங்களை ஒடுக்க முடியும் என ரணில் எதிர்பார்த்துள்ளார். நாங்கள் நாட்டை முடக்குவதற்கு முயற்சித்தோம். ஆனால், ஊடரங்கை அமுல்படுத்தி எங்களை முடக்கியுள்ளார். ஆனால், ஊரடங்கை மீறி நாங்கள் செயற்படுவோம்.

அதன்படி, கோட்டா – ரணிலை விரட்டும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து, அரசியலில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு வழங்குவதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை முன்வைக்கவுள்ளோம். அதனை 17ஆம் திகதி நாட்டுக்கு முன்வைப்போம். அத்தோடு, கோட்டா – ரணிலை விரட்டும் போராட்டத்தை 18ஆம் திகதி, கோட்டை புகையிர நிலையத்திற்கு முன்பாக மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம்.

எனவே, அனைத்து தொழிலாளர்களும் தங்களுடைய நகரங்களில் 18ஆம் திகதி இந்த போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கின்றோம். இனியும் புதிய ஒப்பந்தங்களை முன்னெடுக்க வேண்டாம் என ரணில் - கோட்டாவிடம் கோரும் நாங்கள், உடனடியாக பதவியிலிருந்து விலகுமாறு வலியுறுத்துகின்றோம். இதேவேளை, சபாநாயகர், நாடாளுமன்றத்தை கூட்டி, உரிய தீர்வுகளை எடுத்து, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## இலங்கையில் ஏற்பட்டுள்ள...

இலங்கையில் நடந்துவரும் போராட்டங் களுடன் நாட்டின் நாடாளுமன்றத்தில் மூன்று, நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அந்த கட்சிக்கு சிறந்த ஒருங்கிணைப்பு பலம் இருப்ப தாகவும் இந்திய பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும் மாநிலங்கள் அவை உறுப்பினருமான சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையில் நடக்கும் போராட்டங்களுடன் ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணிக்கு தொடர்புள்ளது. 20, 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஜே.வி.பி. என்பது மிகவும் கொடூரமான வன்முறை அமைப்பாக அறியப்பட்ட அமைப்பு. அந்த அமைப்பு அந்த காலத்தில் அடக்கப்பட்டது.

இன்று மூன்று நான்கு நாடாளுமன்ற உறுப்பினர் களை கொண்டுள்ளது. சிறிய கட்சி என்றாலும் நல்ல அமைப்பு. சம்பந்தப்பட்ட கட்சி புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்ற முயற்சித்து வருகிறது.

ராஜபக்ஷ சகோதரர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்கள் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட வர்கள். தேர்தலில் அவர்கள் வெற்றிபெற்றனர். தேர்தலில் எந்த சர்ச்சையும் இருக்கவில்லை.

அவர்கள் கொண்டாடப்பட்டவர்கள். இராணுவ ஆட்சியாளர்கள் அல்ல. அவர்கள் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டவர்கள். ஒரு குழுவால் ஏன் அவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

பதவி விலகுவதற்கு அவர்களுக்கு உளவியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி இந்தியாவுக்கு மிகவும் ஆபத்தானது. அந்த நாடு எமது எல்லையில் உள்ளது.

அது தீவு நாடு. இந்தியாவை எதிர்க்கும் ஏராளமான மக்கள் உள்ளனர். சீனா, மியன்மார், பாகிஸ்தான் ஆகியன அங்கு நிலைகொண் டுள்ளன.

இந்தியா இதனை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொண்டுள்ளது என நான் நினைக்கின்றேன். இந்தப் பிரச்சினை இந்தியாவுக்கு மிகப் பெரியளவிலான தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதால், தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

தேவையான நடவடிக்கைகளை தற்போதே எடுக்கவேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளில் இருந்து ராஜபக்ஷவினர் விலகிச் சென்றுள்ளனர். இராணுவத்தை அனுப்பி வைக்குமாறு கூட அவர்கள் கேட்டிருக்கலாம். அவர்கள் கேட்டிருந்தால், இந்திய இராணு வத்தை அனுப்பியிருக்கலாம். அழைக்காமல் இராணுவத்தை தரையிறக்கி மற்றுமொரு நாட்டை கைப்பற்ற முடியாது.

இந்தியா போன்ற நாட்டை தலையிட்டு இராணுவத்தை அனுப்பி அமைதியை நிலைநாட்டுமாறு இலங்கை மக்கள் கோரிக்கை விடுக்கும் வரை காத்திருக்கின்றோம்.

அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு எந்தவொரு காரணமும் இல்லை. ஆனால், அது தொடர்ந்தும் நீடித்து வருகிறது. இலங்கை சம்பந்தமாக அமெரிக்கா இன்று அல்லது நாளை அறிக்கை ஒன்றை வெளியிடும் எனவும் சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மாளிகை ஆக்கிரமிப்பு...

ஜனாதிபதி மாளிகையை அன்றே கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், ஜனாதிபதி 13ஆம் திகதி பதவி விலகுவதாக அறிவித்தமையினால், ஜனாதிபதி பதவி விலகும் கடிதத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்வரை ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறப்போவதில்லை என போராட்டக்காரர்கள் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து, ஜனாதிபதி மாளிகை, செயலகம் மற்றும் அலரிமாளிகை என அனைத்தும் கடந்த 5 நாட்களாக மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தன . நாடளாவிய ரீதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அவற்றை பார்வையிட்டதுடன், இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றையும் அங்கு ஏற்பாடு செய்திருந்தனர். எனினும், பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதிக்குள் அங்குள்ள பல பெறுமதியான பொருட்கள், சொத்துகள் என சேதமாக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் பிரதமர் அலுவலகத்தையும் கைப்பற்றியதையடுத்து, நாட்டில் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்தன. இதனையடுத்து, ஜனாதிபதி பதவி விலகியதுடன், மக்கள் வசமுள்ள சொத்துகளை விடுவிக்க வேண்டும் என சர்வமதத் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அத்தோடு, ஜனாதிபதி மாளிகை உள்ளிட்டவற்றை உரிய தரப்பிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சட்டத்தரணிகள் சங்கமும் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், நேற்றுக் காலை காலிமுகத்திடலில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடுசெய்திருந்த போராட்டக்காரர்கள், ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதால், அவர் பதவி விலகியதாக கருதி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆராய்ந்துவருவதாக சபாநாயகர் அறிவித்தமையானது, மக்கள் குரலுக்கு கிடைத்த வெற்றியாகும் எனக் கூறினர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவியிலிருந்து விலகியுள்ளதால், ரணில் விக்ரமசிங்கவும் பதவி விலக வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்கமுடியாது. எனவே, மக்களுக்கு கிடைத்துள்ள வெற்றியோடு, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக மக்களால் கடந்த 9 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகையிலிருந்து போராட்டக்காரர்கள் வெளியேறுவதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்தனர்.

எனினும், எங்களுடைய போராட்டத்தை ஒருபோதும் கைவிடப்போவதில்லை. மாறாக, ரணில் விக்ரமசிங்கவும் பதவியிலிருந்து விலகும் வரை காலிமுகத்திடலில் எங்களுடைய போராட்டத்தை தொடர்வோம் எனவும் தெரிவித்தனர்.

இவர்களின் அறிவிப்புக்குப் பின்னர், ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட அனைத்து இடங்களையும் சுத்தம் செய்து, முன்னர் இருந்தமை போன்றே தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இதனையடுத்து, ஜனாதிபதி மாளிகை நேற்று மாலை வேளையில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் ஒப்படைக்கப்பட்டு, பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

## சட்டம், ஒழுங்கை மீறினால் ...

ஒழுங்கை அமுல்படுத்தவும், தனது மக்களையும், பொதுச்சொத்துகளையும், நாட்டையும் பாதுகாக்கும் வகையில் அதனைப் பராமரிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாடு சுதந்திர நாடாக மாறியதிலிருந்து இது நடைமுறையில் உள்ளது. அதன்மூலம் குடியரசின் இறையாண்மை, அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம் மற்றும் பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டம் ஆகியவை நிலைநிறுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. இந்த ஆண்டு மே மாதம் தொடங்கிய தொடர் பொது போராட்டங்களின்போது அது மிக சமீபத்திய மாதங்களில் தெளிவாக வெளிப்பட்டது.

அந்த வெகுஜனப் போராட்டங்களின்போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இராணுவ உறுப்பினர்களுக்கும் இடையில் ஒருசில அலட்சியமான வாக்குவாதங்கள் மற்றும் மோதல்கள் தவிர, சட்டம் மற்றும் ஒழுங்கை அமுல்படுத்துதல் அல்லது அதை மீறியதன் காரணமாக கணிசமான இயல்புடைய வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை.

ஜூலை 9 அன்று கொழும்பு, கோட்டையில் இடம்பெற்ற சம்பவம் உட்பட பாதுகாப்புப் படைத் தலைவர், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் மூன்று தடவைகளுக்கு மேல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுக்களிடம் அமைதியாக இருக்குமாறு பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரச கட்டடங்கள் மற்றும் அனைத்து சொத்துகளையும் பாதுகாப்பதுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறுவதுடன் அரசியலமைப்பு ரீதியாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு போராட்டக்காரர்களை ஆர்வத்துடன் வலியுறுத்தினர்.

கடந்த 72 மணித்தியாலங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமர், நாடாளுமன்ற சபாநாயகர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின்போது அனைத்து ஆயுதப்படை மற்றும் காவல்துறை தலைவர்களும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் பிரச்சினைகளுக்கு விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டனர். அரசியலமைப்பு விதிகள் மூலம் தீவில் ஏற்பட்ட நெருக்கடி, அமைதியான போராட்டங்கள் முழு பலத்துடன் கையாளப்படக்கூடாது என்று ஒருமனதாக பராமரிக்கப்படுகிறது, ஆனால், அந்த எதிர்ப்பாளர்கள் வன்முறையில் ஈடுபடாத வரை அல்லது பொது சொத்துகளை சேதப்படுத்தாத வரை குறைந்தபட்ச சக்தியும் பிரயோகிக்கப்படாது என குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த உறுதிமொழிகளைப் பொருட்படுத்தாமல், துரதிர்ஷ்டவசமாக எதிர்ப்பாளர்களில் ஒரு பிரிவினர், அதன் பிரகடனப்படுத்தப்பட்ட 'அகிம்சை' அணுகுமுறையிலிருந்து வேண்டுமென்றே விலகி, கடந்த புதன்கிழமை (13) பிற்பகல் வரை தொடர்ந்து சட்டம், ஒழுங்கை மீறி வன்முறையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. நாட்டின் இறையாண்மை மற்றும் ஜனநாயகத்தை மட்டுமே செயல்படுத்தும் ஒரே சட்டமன்ற அமைப்பான நாடாளுமன்ற வளாகத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியாக, அங்கு கொண்டுவரப்பட்ட கனரக இயந்திரங்கள் மூலம் பொலிஸ் தடுப்புகளை அழித்து, நாடாளுமன்ற வளாகம் மற்றும் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் முற்றுகையிடப்பட்டது.

கடந்த புதன்கிழமை (13) இரவு 7.00 மணியளவில், இராணுவத்தினரின் தொடர்ச்சியான அறிவுறுத்தல்களை கணக்கெடுக்காமல், நாடாளுமன்ற வளாகத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைய முயற்சித்த அந்த கட்டுக்கடங்காத ஆர்ப்பாட்டக் கும்பல், பொல்லுகள், இரும்புக் கம்பிகள், கற்கள், தலைக்கவசங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி கடமையில் ஈடுபட்டிருந்த படையினரை ஆக்ரோஷமாக தாக்கி துன்புறுத்தியது மற்றும் வெடிமருந்துகளுடன் கூடிய இரண்டு ரி-56 ஆயுதங்களைப் பறித்து, ஒரு டஜன் இராணுவ வீரர்களுக்கு காயங்களை ஏற்படுத்தியதோடு, அவர்களில் இருவரை சுயநினைவிழக்கும் வரை தாக்கியுள்ளனர். அவர்கள் அவசர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த இரண்டு ரி-56 ஆயுதங்களும் காணாமல்போனது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது, தற்போது அந்த ஆயுதங்களுடன் தப்பியோடிய அந்த எதிர்ப்பாளர்களிடம் இருந்துள்ளது.

பதிலுக்கு இராணுவத் துருப்புகள் குறைந்தபட்ச சக்தியைப் பயன்படுத்தி வானத்தில் பல துப்பாக்கிச்சூடுகளை நடத்திய பின்னர், இராணுவ வீரர்களுக்கும் பொலிஸாருக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் மற்றவர்களையும் தூண்டிய சில கட்டுக்கடங்காத வன்முறைக் கூறுகளைக் கைதுசெய்தனர். எவ்வாறாயினும், அவர்களின் வன்முறைச் சுழற்சியில் தணியாத காவல்துறையினருடன் இராணுவத்தினர், புதன்கிழமை (13) இரவுவரை குறைந்தபட்ச பலத்துடன் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர், மேலும் அந்த வன்முறைக் கூறுகளைக் கலைத்து அனைத்து முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

வன்முறைச் செயல்கள் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, ஆயுதப் படைகள் அல்லது பொதுச் சொத்துகளுக்குத் தீங்கு விளைவிப்பதை நோக்கமாகக்கொண்ட போராட்டக்காரர்கள், அனைத்துவிதமான வன்முறைகளிலிருந்தும் உடனடியாக விலகிக்கொள்ளுமாறும் அல்லது ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் தங்கள் படையைச் செயல்படுத்த சட்டபூர்வமாக அதிகாரம் பெற்றிருப்பதால், விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# கொழும்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!












ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை பதவி விலகக் கோரி கொழும்பில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்ததையடுத்து, கடந்த 09ஆம் திகதி பாரிய போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதி செயலகம் மற்றம் அலரிமாளிகை என்பன ஆர்ப்பாட்டக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது.

அனையடுத்து கடந்த 13ஆம் திகதி பதிவி விலகுவதாக ஜனாதிபதி அறிவித்திருந்த நிலையில், நேற்று முன்தினமும் கொழும்பில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் கொழும்பில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதனையடுத்தும் நேற்று (14) நண்பகல் முதல் மீண்டும் ஊரங்கு அமுல்படுத்தப்பட்டது.

இந்நிலையில், கொழும்பில் நேற்று பலத்த பாதுகாப்பு அமுல்படுத்தப்பட்டிருந்தது. கொழும்பில் இராணுவ கவச வாகனங்கள் நடமாடியதுடன், இராணுவத்தினரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

## கஞ்சாவுடன் ஜனாதிபதி மாளிகையில் இளைஞர் கைது

ஜனாதிபதி மாளிகையில் கஞ்சா வைத்திருந்த இளைஞர் ஒருவரை நேற்று கைதுசெய்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

மீரிகமயைச் சேர்ந்த 24 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்துக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போது அவரிடம் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நேற்று நடவடிக்கை எடுத்திருந்தனர்.

## வெளிப்பிரதேசங்களிலிருந்து கொழும்புக்கு வரும் புகையிரத சேவைகளுக்கு தடை

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளமையினால் வெளிப்பிரதேசங்களிலிருந்து கொழும்புக்கு வரும் புகையிரத சேவைகளை இரத்துசெய்துள்ளதாக புகையிரதத் திணைக்கள் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் புகையிரதங்கள் மாத்திரம் வெளியிடங்களுக்கு பயணிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்று (15) காலை 5.00 மணிவரை அமுலாகும் வரையில் கொழும்பு மாவட்டத்துக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குகளுக்கமைய வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜனாதிபதியினால் இந்த உத்தரவு பிரப்பிக்கப் பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி மாளிகை பாதுகாப்புப் படையினர் வசம்





நாட்டில் கடந்த ஜூலை 09ஆம் திகதி பொதுமக்களால் முற்றுகையிடப்பட்ட ஜனாதிபதி மாளிகை நேற்று (14) முதல் மீண்டும் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

கடந்த 09ஆம் திகதியின் பின்னர் தொடர்ச்சியாக ஜனாதிபதி செயலகம் பொதுமக்களின் வசமிருந்த நிலையிலேயே, நேற்று செயலகத்தை மீண்டும் பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற அமைதியின்மையினால் ஜனாதிபதி செயலகத்தின் சில பகுதிகள் மற்றும் தொல்பொருள் பெறுமதி மிக்க பொருட்கள் என்பன சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சில பொருட்கள் முறையாக பாதுகாக்கப்படாமல் தொடர்ந்து சேதப்படுத்தப்படுமாக இருந்தால் அவை முழுமையாக சேதமடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தொல்பொருள் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் போராட்டக்காரர்களுக்கும் படைத்தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின்போது காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களை பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா நேற்று பார்வையிட்டார்.

## நாட்டில் 10 வீதமான தனியார் பஸ்களே சேவையில் உள்ளன



நாட்டில் ஐந்து முதல் 10 வீதத்திற்கு இடைப்பட்ட தனியார் பஸ் போக்குவரத்து மாத்திரமே இடம்பெறுவதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தனியார் பஸ்களுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாமையே இதற்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். தற்போதும் ஏராளமான பஸ்கள் நீண்ட வரிசைகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களிலிருந்து டீசலை பெற்றுத்தருவதாக அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ள போதிலும் முறையான வகையில் அந்தத் திட்டம் செயற்படுத்தப் படுவதில்லை எனவும் அவர் தெரிவித் தார்.

பஸ்கள் குறைவான எண்ணிக்கையில் சேவையில் ஈடுபடுவதால் அன்றாடம் தொழிலுக்கு செல்வோர், தமது தேவைகளுக்காக பயணம் செய்வோர் பெரும் சிரமங்களுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

தனியார் பஸ்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் தொடர்ச்சியான சேவைகளை வழங்க முடியும் என கெமுனு விஜேரத்ன நம்பிக்கை வெளியிட்டார்.

## பொலிஸ் சீருடையில் பெற்றோல் பெற முயற்சி

கண்டி, அலதெனியவில் நபர் ஒருவரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பெற்றுக்கொண்டு, பொலிஸ் சீருடையுடன் சென்று, குறித்த மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முயற்சித்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு எதிராக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர் அலதெனிய பிரதேசத்திலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு பல தடவைகள் சென்று, பல தடவைகள் எரிபொருளைப் பெற்றுக்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு எரிபொருள் நிரப்புவதற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற சந்தேகநபரின் செயற்பாட்டை அறிந்துகொண்ட வரிசையில் நின்ற பொதுமக்கள், அவரை சுற்றிவ ளைத்து தாக்கியபோது, அவர் மோட்டார் சைக்கிளையும் போட்டுவிட்டு ஓடியுள்ளார். குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கண்காணிப்புக் கெமராக்களில் பதிவான காட்சிகளின் உதவியுடன் சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜப்பானிய பரீட்சைகள் தற்காலிகமாக இரத்து

நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, இம்மாதம் 15, 17 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த ஜப்பானிய பரீட்சைகள் சில தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.

ஜப்பானிய குடிவரவு சேவை முகவர் நிலையத்தினால் அறிவிக்கப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானிய மொழியின் அடிப்படை சோதனை (JET அடிப்படை) தாதியர் திறன் பரீட்சை, உணவு பதப்படுத்தும் திறன்சோதனை ஆகிய பரீட்சைகளே தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு, மேற்கூறிய பரீட்சைகளின் திகதிகள் மாற்றப்பட வேண்டும் அல்லது இரத்துசெய்யப்பட வேண்டும் என்று ஜப்பான் குடிவரவு சேவை முகவர் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி) - கொட்டவை கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

***காணி ஏல விற்பனை 01***

**பொரலஸ்கமுவயில் மீகொடையில் வசிக்கும் எமில்: பொல்வத்த கண்கானமலாகே ரவீந்திர பெரேரா,** என்பவர் **"கடப்பாட்டாளர்களாகவும்:/ ஈடுவைத்தவராகவும்"** என்ற வகையில் செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு S.D. **எதிரிவிக்ரம** என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதியிடப்பட்ட 2057B ஆம் இலக்கபிணை முறியின் கீழ் அடமானப் பத்திரத்தில் செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதில்.தவறிழைத்துள்ளார் ஆதலால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது. காணியின் அளவு 32.78 பேர்ச் (ஏ0.ரூ0.பே.32.78)

**காணியின் அளவு 32.78 பேர்ச் (ஏ0.ரூ0.பே.32.78)**
**கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அனைத்துடனான எல்லாம்.**

**2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி மு.ப, 10.30 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குற்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள தலைமை அலுவளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல: விற்பனையில் விற்கப்படும்.**

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி-** கொழும்பில் இருந்து கொழும்பு- அவிசாவளை வீதியில் மீகொட ஜன்சிட்டன் வரை சென்று வலதுபுறம் ஆர்ட்டிகல வீதிக்கு திரும்பி சுமார் 1கி.மீ. பொருள் சொத்து ரோ·ப் இடத்தில் அமைந்துள்ளது.

***காணி ஏல விற்பனை 02***

வரிமதிபபீட்டு இலக்கம் 2057 திகதி 22.02.2005 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட **கெஹேனுவல இலக்கம் 447/C மற்றும் கொழும்பு மேற்கு ஒரோவின்ஸ் பிரதேசத்தின் கிராம நிலாதாரி பிரிவுக்குட்பட்ட கெஹனுவல கிராமத்தில் அமைந்துள்ள காணி அழைப்பாளரின் உரிமம் பெற்ற சர்வேயர் கொடபரஹலந்தாவின் உரிமம் பெற்றவர்.** 2057ஆம் இலக்க நில வரைபடத்தில் அமைந்திருக்கும் காணியானது லொட் A3 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டின் பரப்பளவ **இறுபது புள்ளி ஒன்பது ஒன்று பேர்ச் (ஏ0.ரூ0-பே.20.91)** இலக்கம் 2057 காணியில் அமைந்துள்ள யாவும் ஆகும்.

**காணியின் அளவு 20.91 பேர்ச் (ஏ0.ரூ0.பே.20.91)**
**கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அனைத்துடனான எல்லாம்.**

**2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி மு.ப, 10.45 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குற்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள தலைமை அலுவளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல: விற்பனையில் விற்கப்படும்.**

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி-** கொழும்பில் இருந்து கொழும்பு- அவிசாவளை வீதியில் மீகொட ஜன்சிட்டன் வரை சென்று வலதுபுறம் ஆர்ட்டிகல வீதிக்கு திரும்பி சுமார் 1.5 கி.மீ. பொருள் சொத்து ரோ·ப் இடத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2022.07.15 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2022.05.27 ஆம் திகதி டெய்லி FT, அத மற்றும் தினக்குரல் 2022.05.30 பத்திரிகைகளிலும்: பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 3000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள் 1500/-
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும். இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

பிரதான முகாமையாளர். (சட்டம்), செலான் வங்கி பீஎல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456468,011-2456473

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடாத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**துசித கருணாரத்ன.(JP)**
**நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்**
**மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**

T.&.H Auction
**இல. 50/3, விஹார மாவத்த வீதி,**
**கொலன்னாவ.**
**தொலைபேசி இலக்கம்: 011 3068185, 011– 2572940**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூலை 15ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# மக்கள் போராட்டம் சரியான பாதையில்தான் செல்கிறதா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை, பிரதமர் அலுவலகம் ஆகியவை போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டுள்ளன. தமது போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் அவ்விடங்களிலிருந்து வெளியேறப் போவதில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலிமுகத்திடல், கோட்டா கோ கமவில் போராட்டமானது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில், போராட்டக் குழுவொன்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தையும் சபாநாயகர் அலுவலகத்தையும் முற்றுகையிட முயற்சித்தது.

ஜனாதிபதி, பிரதமர் அலுவலகங்கள் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தை கையகப்படுத்தவேண்டிய அவசியம் கிடையாதென காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அறிவித்திருந்தனர். எனினும், பெருந்திரளானோர் நாடாளுமன்றத்தை நோக்கிச் சென்றதால் பாதுகாப்புத் தரப்பினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது.

அதேபோன்று சபாநாயகர் இல்லத்துக்குச் செல்வதற்கும் நூற்றுக்கணக்கானோர் முயற்சித்தனர்.

இதன் காரணமாக பாதுகாப்புத் தரப்பினருடன் ஏற்பட்ட மோதலில் 40இற்கும் அதிகமானோர் காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டும் 60 ரவைகளும் இதன்போது களவாடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலைமை மிக மோசமானதாகும். ஜனநாயக ரீதியான போராட்டங்கள் வெற்றிபெறுகின்றமை உலக வரலாறு. ஆனால், வன்முறைகளால் போராட்டங்கள் வெற்றிபெற்றதாகக் கிடையாது. அதனால் உண்மையான போராட்டம் தொய்வுக்குட்படுத்தப்பட்டு உயிர்ச்சேதங்கள் ஏற்படுமே தவிர, நியாயமான வெற்றிகள் கிடைத்துவிடாது.

அவ்வாறு ஏதோவொரு வடிவில் வெற்றி கிடைத்தாலும் இழப்புகள் ஏராளமாக இருக்கும் என்பதை போராட்டக்காரர்கள் உணரவேண்டும்.

கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சுமார் மூன்று மாதங்களுக்கு மேலாக இடம்பெற்றுவந்த போராட்டத்தின் நோக்கம் இங்கே வேறுதிசையில் பயணிக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

போராட்டத்தில் வேண்டுமென்றே வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை கடந்த சில தினங்களில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் ஏற்படுத்துகின்றன. ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி, பிரதமர் செயலகங்கள், பிரதமரின் அலுவலகம் ஆகியன இலங்கையின் தீர்மானமிக்க முக்கிய இடங்களாகும்.

அங்கே சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டு பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன. ஆவணங்கள் ஆங்காங்கே தூக்கியெறியப்பட்டுள்ளன.

சட்டம், ஒழுங்கை மதிக்கின்றவர்களால் இதனைச் செய்ய முடியுமா? அந்த சொத்துகள், ஆவணங்கள் என்பன நாட்டு மக்களுக்கானவை. அவை மக்களின் பணத்தினால் உருவானவை. அவற்றை சேதமாக்குவதால் மீண்டும் மக்களின் பணமே வீணடிக்கப்படும் என்பதை சார்ந்தோர் உணர்வதில்லை.

போராட்டம் என்ற பெயரில் உணர்வுகளுக்கு கட்டுப்படாமல் வெறித்தனமாக கண்டதையும் செய்யலாம் என்பதையும் அதிகாரம் தங்கள் வசம்தான் என நினைப்போரும் இருக்கும் பட்சத்தில் இவ்வாறான செயல்களைக் கட்டுப்படுத்த முடியாது.

இலங்கையின் ஜனநாயக போராட்டத்தை உலக நாடுகள் அனைத்தும் அவதானத்துடன் பார்த்துக்கொண்டிருக்கின்றன. மக்களின் நியாயமான எதிர்ப்புக்கு உதாரணமாக இந்தப் போராட்டம் வரலாற்றில் இடம்பெற வேண்டும் என்பதை உண்மையான போராட்டக்காரர்கள் விரும்புகிறார்கள்.

போராட்டக்காரர்கள் எனச் சொல்லிக்கொள்ளும் சில குழுவினரால் ஒட்டுமொத்த போராட்டத்துக்கும் இழுக்கு ஏற்படக்கூடிய வாய்ப்பு அண்மைய நாட்களாக தென்படுகிறது.

ஜனாதிபதி மாளிகையில் ஐந்து அல்லது ஆறு எண்ணெய்க் கப்பல்கள் கொள்வனவுசெய்யும் அளவுக்கு பெறுமதியான சித்திரங்கள் இருப்பதாக மஹிந்த அமரவீர கருத்து வெளியிட்டிருந்தார். அவ்வாறெனின், அந்தச் சித்திரங்களும் இன்னும் பல பெறுமதியான சொத்துகளும் சேதமடையுமாயின் அதனால் ஏற்படும் இழப்பு நாட்டு மக்களுக்கேயாகும்.

இதேவேளை, போராட்டத்தில் கலந்துகொள்வோர் தங்களுடையதும் தங்கள் சார்ந்தோருடையதும் உயிர் பாதுகாப்பு குறித்து சிந்திக்க வேண்டும். ஓர் உயிர் இழக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதனால் அவர்களின் குடும்பத்தார் எத்தனை பாடுபடுவார்கள்?

உதாரணமாக, குருநாகல் தலதாகம பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தை போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த வேளை கண்ணீர்ப்புகைப் பிரயோகம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்த இழப்பு எத்தனை கொடிது? ஒரு குழந்தை காலம் முழுவதும் தந்தையின்றி வாழும் சூழலை உருவாக்கியது யார்? அந்த இழப்பு குழந்தைக்கு எத்தனையெத்தனை பாதிப்புகளைக் கொண்டுவரப்போகிறது?

போராட்டத்தின் வெற்றியை போராட்டக்காரர்கள் ஒருபுறம் கொண்டாடும்போது உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் வேதனையைச் சுமந்தல்லவா இருக்கப்போகிறார்கள்?

ஆக, இவை அத்தனை விடயங்கள் குறித்தும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் சிந்திக்க வேண்டும். போராட்டத்தினால் உள்நாட்டிலும் சர்வதேசத்தின் மத்தியிலும் அவப்பெயர் ஏற்படுமாயின், வரலாற்றில் அதுவும் கறுப்புப் புள்ளியாக பதிவாகும் என்பதை மறந்துவிடக்கூடாது.

# மக்கள் போராட்டத்திற்கு வெற்றி!




இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக கடந்த காலத்தில் இருந்தாலும் தற்போது உலகின் பணவீக்க வீதம் அதிகம்கொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. நாட்டில் ஒருபோதும் இல்லாது அந்நியச் செலாவணி வீதம் குறைவடைந்து, இறக்குமதி குறைவடைந்து, அத்தியாவசியப் பொருட்கள் தொடக்கம் ஆடம்பர பொருட்கள்வரை விலை உயர்வடைந்து பொதுமக்கள் நடுத்தெருவில் வாழ்நாளை கழிக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாளுக்கு நாள் வரிசைகளில் உயிரிழக்கின்ற நிலையை காண்கின்றோம்.

நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளுகை கட்டமைப்பில் ஏற்பட்ட தொடர் குறைபாடுகளும், பலவீனமான அரசியல் தலைவர்களுமே காரணமென மக்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இதுவரைகாலமும் கோட்பாடு ரீதியாக இருந்த ஜனநாயகம் இன்று புதிய பாதையை நோக்கி நகர்கின்றது. போராட்டக் களத்தின் நடைமுறைகள், ஒழுங்கு விதிகள், ஒழுக்கம், பண்பாடு, பரஸ்பர மரியாதை, பன்மைத்துவம், பெண்ணுரிமை, மத சகிப்புத்தன்மை போன்ற அனைத்து காரணிகளோடு இனவாதமற்ற இலங்கையை ஜனநாயகத்தோடு நோக்குவதற்குமான ஒரு பரந்த வாய்ப்பினை அளித்துள்ளது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் பதவிக்கு வந்து 23 மாதங்களில் மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்ட ஒரே ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதிவாகியுள்ளார்.

தான் தோற்றுப்போன ஜனாதிபதியாக வெளியேற மாட்டேன் என கோட்டா தெரிவித்திருந்தார். எனினும், நாட்டின் நிர்வாக செயல்திறன் பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் ராஜபக்ஷ குடும்பத்துக்கு என்ன என்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்து முடித்தார். உயர்ந்த பதவிகளை ராஜபக்ஷர்களுக்கு வழங்கினார். 19ஆவது திருத்தம் இல்லாது ஒழிக்கப்பட்டு இருபதாவதை கொண்டுவந்தார். சர்வதேச கொள்கை பற்றிய ஒரு தெளிவான கொள்கையற்ற ஆட்சியாக கோட்டாவின் ஆட்சி அமைந்துள்ளது. இந்தியாவும், சீனாவும் தன்னுடன் கைகோர்த்து இருக்கும் வரை தமக்கு தோல்வி இல்லை என ராஜபக்ஷர்கள் கனவு கண்டிருந்தனர்.

தேரர்களின் ஆலோசனைகளை நம்பி மோசம் போனார்கள். தன்னைப் போன்ற வேறெந்த ஆட்சியாளனும் இலங்கையை ஆட்சிசெய்ய முடியாது என்ற தலைக்கனத்துடன் பதவியேற்று தன்னைப் போன்று வேறு எந்த ஆட்சியாளனும் இந்த நாட்டை அழித்திருக்க முடியாது என்ற நிலைக்கு நாட்டை தள்ளியுள்ளார். இவ்வாறான இனவாதக் கொள்கையே கோட்டாவின் ஆட்சி தோற்றுப்போக காரணமாக அமைந்ததென்பது கசப்பான உண்மை. இனி ராஜபக்ஷர்கள் இந்த அரசியலுக்கும் வேண்டாம், நாட்டுக்கும் வேண்டாம் என்ற நிலையில் மக்கள் அவர்களுக்கு எதிராக களம் இறங்கியுள்ளனர். தான் பற்றவைத்து குளிர்காய்ந்த நெருப்பே தனக்கு எதிராக எரிவதையும் அதில் கொஞ்சம் கொஞ்சமாக தான் அழிந்துகொண்டிருப்பதை இந்த ராஜபக்ஷர்கள் இன்னும் சரியாக புரிந்து கொள்ளவில்லை. மிக விரைவில் புரிந்துகொள்வார்கள். அந்த நாள் மிக விரைவில். ஓர் அரசாங்கத்திற்கு எவ்வாறு பொறுப்புணர்ச்சி மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளனவோ அதேபோல் எதிர்க்கட்சிக்கும் உண்டு என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். வெளிப்படைத்தன்மை மிக மிக அவசியம். இலங்கையை பொறுத்தமட்டில், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியவற்றுக்கு இடையே கொள்கை வித்தியாசத்தை காண்பது அரிது. ஒவ்வொரு தேர்தலிலும் முகங்கள் மாறுகின்றனவே அன்றி சிஸ்டம் மாறுவது கிடையாது.

சுதந்திர இலங்கையில் உண்மையிலேயே ஒரு பாரிய பொருளாதார முறைமை மாற்றம் ஏற்பட்டதென்றால் அது 1978ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை எனலாம். இதனை கடுமையாக எதிர்த்த அன்றைய எதிர்க்கட்சி, அதன் பின் பல முறை ஆட்சியை கைப்பற்றி, நாட்டின் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கு அந்த திறந்த பொருளாதாரக் கொள்கையே காரணம் என்று தொடர்ந்தும் குற்றஞ்சாட்டியபோதிலும், அந்த முறைமையை மாற்றுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இன்றளவிலும் அதே பொருளாதார சிஸ்டம்தான் நடைமுறையில் உள்ளது.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால், ஏதோ இருக்கவேண்டும் என்பதற்காக ஓர் எதிர்க்கட்சி உள்ளதேயன்றி, உண்மையில் அவ்வாறான ஒன்று இல்லை என்பதே யதார்த்தம்.

இன்றைய போராட்டங்கள் பல முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. அந்தவகையில், மரபு ரீதியான அரசியல் தலைமைத்துவம் மீதான அவநம்பிக்கை, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான அதிருப்தி, ஊழல் மோசடிகள் நிறைந்த அரசியல் கலாசாரம் மீதான விரக்தி போன்ற பல விடயங்களை அவதானிக்க முடியும். இன்று அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, அரசியல் கட்சிகளும் முற்றாகவே நம்பிக்கையை இழந்துள்ளன.

ஆகவேதான் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வீடு செல்லவேண்டும் என்ற 'கோ ஹோம் கோட்டா' எழுச்சி பெற்றுள்ளது. அரசாட்சியில் பொதுமக்களின் நம்பிக்கை என்பது அடிப்படையானதாகும்.

மக்களின் ஒரே கோரிக்கை இந்த கொடுங்கோல் ஆட்சியாளர்களான ராஜபக்ஷ குடும்பம் ஆட்சியை விட்டு வெளியேறி செல்ல வேண்டும் என்பதுதான். இதனையே மக்கள் தொடர் போராட்டங்களின் மூலம் உணர்த்துகின்றனர். கடந்த மே 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ குழுவினரால் போராட்டக்காரர்கள் கடுமையாக தாக்கப்பட்டு நாட்டின் அனைத்துப் பகுதியிலும் கலவரம் வெடித்தது நாம் அறிவோம். அதன் பின்னர் பிரதமர் பதவியை மஹிந்த மற்றும் நிதி அமைச்சர் பதவியை பெசில் ராஜபக்ஷ உட்பட துறந்தனர். எனினும், கோட்டா வெளியேறு என்பதே மக்களின் கோஷம். எனவே, கடந்த 9ஆம் திகதி திரண்ட மக்கள் நாட்டில் பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். மக்களின் தியாக போராட்டத்திற்கு பாரிய வெற்றி கிடைத்துள்ளது. கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகை கைப்பற்றப்பட்டதுடன், போராட்டக்காரர்களினால் பல்வேறு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டது. அதில் குறிப்பாக, ஜனாதிபதி கோட்டாபய பதவி விலக வேண்டும் என்பதே பிரதானமானது. சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கட்சி கலந்துரையாடலில்தான் 13ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பதவியை துறப்பாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இலங்கை 1947இற்கு பின்னர் இரண்டாவது முறையாக சுதந்திரமடைந்துள்ளதாக பொதுமக்கள் கருதுகின்றனர். இந்தப் பாரிய மாற்றம் எதிர்கால அரசியலில் எவ்வாறான மாற்றங்களை கொண்டுவரும் என்பது அனைவரினது எதிர்பார்ப்பாக உள்ளது. இன, மத, கட்சி, பேதங்கள் இன்றி நாட்டின் எதிர்காலத்திற்காக போராடினால் நிச்சயம் வெற்றி இருக்கும் என்பதை இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் உணர்த்தும் பாடமாக உள்ளது.

மக்களின் ஒரே கோரிக்கை அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின் நிம்மதி இந்த நாட்டில் நிலைநாட்டப்பட வேண்டும். அதற்காகவே அவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். எனவே, எதிர்க்கட்சி பலமாக மாறும்போது தோல்வியடைந்துள்ள இந்த மொட்டு அரசை வீழ்த்தி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். எது எவ்வாறிருந்தாலும் நாட்டின் ஆட்சியை மக்களே இன்று தீர்மானித்துள்ளனர்.

**– அப்ரா அன்ஸார் –**

## இன்றைய நாளில்...

- 1149 – திருக்கல்லறைத் தேவாலயம் எருசலேமில் புனிதத் தலமாக்கப்பட்டது.
- 1816 – பிரெஞ்சு இயற்பியலாளர் அகஸ்தீன் பிரெனெல் ஒளியின் விளிம்பு விளைவுக்கான பின்னிணைப்பாகத் தனது புகழ்பெற்ற பிரெனெல் வலயங்கள் பற்றி அறிமுகப்படுத்தினார்.
- 1860 – இலங்கையின் பிரதம நீதியரசராக சேர் எட்வேர்ட் செப்பர்ட் கிறீசி நியமிக்கப்பட்டார்.
- 1955 – அணுவாயுதங்களுக்கு எதிராக 18 நோபல் விருதாளர்கள் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். பின்னர் மேலும் 34 பேர் கையெழுத்திட்டனர்.
- 1991 – இலங்கை இராணுவத்தின் எறிகணை வீச்சில் ஈழத்து எழுத்தாளர் நெல்லை க. பேரன் குடும்பத்தோடு கொல்லப்பட்டார்.
- 1998 – இலங்கை, வவுனியாவில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் கொல்லப்பட்டார்.
- 2006 – ட்விட்டர் சமூக வலைத்தளம் ஆரம்பிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

போறபோக்கை பார்த்தால்
கோட்டாபயவே நல்லம் எண்டு
சொல்லவச்சிடுவாங்கள் போல...



# திறன்மிக்க முகாமைத்துவ திட்டங்களைக் கொண்ட குழுவே புதிய அமைச்சரவையாக தெரிவுசெய்யப்பட வேண்டும்

## அவ்வாறு இல்லாவிட்டால் மீண்டும் கட்டியெழுப்ப முடியாதளவுக்கு நாடு நெருக்கடிக்குள்ளாகுமென பெப்ரல் அமைப்பு எச்சரிக்கை

புதிய அமைச்சரவையை தெரிவு செய்யும்போது, சம்பிரதாய பூர்வமான அரசியல் முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தத் தயாராகவுள்ள, திறன்மிக்க முகாமைத்துவக் குழுவொன்றை தெரிவு செய்வது தொடர்பில் அரசியல் கட்சிகளும் கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதுள்ள நெருக்கடி மேலும் வலுவடைந்து, நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாதளவுக்கு பாரிய நெருக்கடிக்குள்ளாகுவதை யாராலும் தடுக்க முடியாது என சுதந்திரமானதும் நியாயமானதும் தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (பெப்ரல்) தெரிவித்துள்து.

இதுதொடர்பில் விளக்கமளித்து அந்த அமைப்பு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாடு இன்று சந்தித்துள்ள பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நிலையற்ற தன்மை தொடர்பிலும் அந்த நிலைமையில் மாற்றத்தை கொண்டுவருவதற்காக அரசியல் கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மறுக்கமுடியாத பொறுப்பை இதுவரையில் புரிந்துகொள்ளாத மக்கள் பிரதிநிதிகள் நாட்டில் இருப்பது அவர்களின் நடவடிக்கைகளில் தெரியவருகிறது.

தற்போதைய நிலைமையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் அரசியல் வாதிகளான நீங்கள் மற்றும் பிரஜைகளான நாங்கள் ஏற்படப்போகும் அழவுகளை தடுக்க முடியாமல் போய்விடும். எதிர்வரும் காலத்தில் யார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் பிரபல்யமற்ற முடிவுகளை எடுக்கவேண்டி ஏற்படும் என்பதுடன், பிரஜைகளான நாங்கள் நேரடியாக இந்த பிரச்சினைக்கு பொறுப்புக்கு கூறமுடியாது என்றாலும் பிரஜைகள் பாரிய அர்ப்பணிப்பை செய்யவேண்டி ஏற்பட்டுள்ளது. அதனால், ஜனாதிபதி மற்றும் பிரதமரை தெரிவுசெய்யும்போது கீழே குறிப்பிடப்படும் விடயங்கள் குறித்து கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்களான நீங்கள் அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

1. இடைக்கால அரசாங்கத்தின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை நியமிக்கும்போது சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கத்துடன் அவர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

2. அவ்வாறு தெரிவுசெய்யப்படும்போது அந்தந்த அரசியல் கடசிகளுக்கு நாடாளுமன்றத்தில் இருக்கும் பெரும்பான்மையை மாத்திரம் பார்ப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

3. அரசியல் கட்சிகளிடையே எவ்வித பேதமும், முரண்பாடும் ஏற்படும் வகையில் செயற்படுதல் கருத்து வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

4. தனிப்பட்ட கொள்கைத் திட்டங்கள், அரசியல் கொள்கை திட்டங்கள் மற்றும் குறுகிய கட்சி, அதிகார கொள்கைகளை ஓரங்கட்டிவிட்டு மக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்பட வேண்டும்.

5. எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு தற்போதைய நெருக்கடி நிலைமையில் தீர்மானங்களை எடுப்பதைத் தவிரித்துக்கொள்ள வேண்டும்.

6.அடுத்த அமைச்சரவையை தெரிவு செய்யும்போது நாடாளுமன்றத்தை பிரிதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளிலுமுள்ள ஒருவரையாவது நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. அதேபோன்று அமைச்சரவையை தெரிவு செய்யும்போது தற்போதுள்ள பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாணுதல், சர்வதேச நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு நேர்மறை ஒத்துழைப்பை பெற்றுக்கொடுக்க கூடிய மக்களின் எதிர்ப்பைப் பெற்ற நபர்களைத் தெரிவு செய்யாதவாறு பார்த்துகொள்ள வேண்டும்.

8. சர்வக்கட்சி அரசாங்கமொன்றில் ஜனாதிபதி அல்லது பிரதமரிடமிருந்து அமைச்சரவை பதவிக்கு உங்களுக்கு அழைப்பு வருமாக இருந்தால் அதனை நிராகரிக்காது பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள்.

மேற்குறிப்பிட்ட சகல விடயங்களையும் அனைத்து அரசியல் கட்சிகளும் கவனத்தில் கொள்ள வேண்டுமென நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். அதேபோன்று அமைச்சரவை தெரிவுசெய்யும்போது, சம்பிரதாயபூர்வமான அரசியல் முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்த தயாராகவுள்ள, திறன்மிக்க முகாமைத்துவ குழுவொன்றை தெரிவுசெய்வது தொடர்பில் அரசியல் கட்சிகளும் கவனம் செலுத்தவேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதுள்ள நெருக்கடி மேலும் வலுவடைந்து, நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாதளவுக்கு பாரிய நெருக்கடிக்குள்ளாகுவதை யாராலும் தடுக்க முடியாது.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டுமென வலியுறுத்தி ஆசிரியர் சங்கம், முன்னிலை சோசலிசக் கட்சி உள்ளிட்ட தரப்பினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட போராட்டமொன்று நேற்று (14) கோட்டை பிரதான புகையிரத நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது.

## ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய 84 பேர் மருத்துவமனையில் அனுமதி

பொல்துவ சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் எடுத்த முயற்சியின்போது கண்ணீர் புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் 42 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நேற்று முன்தினம் ஆர்ப்பாட் டங்களில் காயமடைந்த 84 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்களில் 5 பெண்கள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



காயமடைந்தவர்களில் ஒரு இராணுவ வீரரும் மற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹங்வெல்லயில் திருடப்பட்ட ரிப்பர் வாகனம் வத்தளையில் கண்டுபிடிப்பு

ஹங்வெல்லையில் திருடப்பட்ட பஸ் மற்றும் ரிப்பர் வண்டி ஒன்றும் வத்தளை பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ் மற்றும் டிப்பர் வண்டிகள் வத்தளை பிரதேசத்தில் வாகன உதிரிப்பாக நிலையம் ஒன்றிலிருந்து பொலிஸாரால் கண்டுப்பிடிக் கப்பட்டுள்ளது. ஹங்வெல்ல பொலிஸ் நிலைய குற்ற விசாரணை பிரிவினர் முன்னெடுத்த நீண்ட நேர விசாரணையின் பின்னரே அவை மீட்கப்பட்டுள்ளன. பஸ் வண்டி முற்றிலும் பாகங்களாக பிரிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சில உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததோடு, எஞ்சின், கியர் மற்றும் ஆசனங்கள் விற்பனை செய்யப்படவிருந்ததாக தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## நாட்டின் இருவேறு பிரதேசங்களில் கொலைச் சம்பவங்கள்

நாட்டின் இருவேறு பிரதேசங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹஓயா, ஹிகுராலந்த பிரதேசத்தில் மண்வெட்டி ஒன்றினால் தாக்கப்பட்டதில் பலத்த காயமடைந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 60 வயதுடைய முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மஹஓயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் மகனே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன், அவர் மஹஓயா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஹம்பாந்தோட்டை, பந்தகிரிய பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மதுபான விருந்து ஒன்றின்போது ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் 05 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## கந்தர்மடத்தில் புகையிரத விபத்து; ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் நேற்று இடம்பெற்ற புகையிரத விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தர்மட பகுதியிலிருந்த புகையிரத கடவையில் நேற்று (14) மதியம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் புகையிரதத்துடன் மோதுண்டே அவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து யாழிற்கு சென்ற புகையிரதம் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



கடந்த ஜூலை 09ஆம் திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து, ஆர்ப்பாட்டக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த அலரி மாளிகை நேற்று (14) மீண்டும் பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கிருந்த மக்கள் பொருட்களுடன் வெளியேறியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி, பதுளை நகரில் கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று (14) முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டதுடன், இந்த கவனயீர்ப்பு போராட்டம் பதுளை கோட்டா கோ கிளையின் முன்பாக இடம்பெற்றது. (படங்கள் - தெமோதரை நிருபர் )

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - திஸ்ஸமஹாராம கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

அம்பலாந்தோட்டையைச் சேர்ந்த விஜேதுங்க லியனகே பட்டபெந்திகே பிரதீப் ஷாந்து குமார கடப்பாடுடையவராகவும்/ஈடுவைத்தவராகவும் செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு ஜீ.பி. பரணவித்தானவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 ஏப்ரல் 09ஆம் திகதியிடப்பட்ட 960 மற்றும் 2018 ஏப்ரல்10ஆம் திகதியிடப்பட்ட 965 ஆகிய இரு ஈட்டு முறிகள் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலால்,

**2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேர அட்டவணையின்படி செலான் வங்கி பீ.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல. 90, காலி வீதி, கொழும்பு 03இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

**1ஆவது ஏலவிற்பனை - மு.ப. 11.00 மணி**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை. மாநகர சபை எல்லை மற்றும் பிரதேச செயலாளர். பிரிவிற்குள் துடாவ (வடக்கு) கிராம சேவகர் பிரிவின் எல்லைக்குள், தெல்கட கிராமத்தில் குருந்துவத்த வீதியில் தேவரகடுகேவத்த அல்லது தேவரவடுகேவத்த அல்லது தெல்கடவத்த காணித்துண்டு Bயின் காணித்துண்டு B3 என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் U. குணவர்தனவினால் வரையப்பட்ட 1999.02.27ஆம் திகதியிடப்பட்ட 744 ஆம் இலக்க வரைபடத்தில் காணி அத்தோடு, பத்து தசம் பூஜ்ஜியம் எட்டு பேர்ச்சஸ் (ஏ0.ரூ0.பே.10.08) அல்லது 0.02549 ஹெக்டேயர்கள் கட்டடங்கள், மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அனைத்துடனான எல்லாம்.

மேலே கூறப்பட்ட காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்.ஏ.ஏ. பத்மகுமாரவினால் 2017.10.28ஆம் திகதியிடப்பட்ட அண்மைய வரைபட இலக்கம் 766 இல் காணித்துண்டு 2 என மேலதிகமாக காட்டப்பட்டுள்ளதுடன், ஒன்பது தசம் எழு நான்கு பேர்ச். (0ஏ.0ரூ.9.74பே.) விஸ்தீரணமுடையது.

இக்காணி பிரசித்த நொத்தரிசு ஜி.பி.பரணவித்தானவினால் உறுதிப்படுத்தப்பட்ட2018.04.03ஆம் திகதியிடப்பட்ட 960ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழ் ஈடுவைக்கப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி-** மாத்தறையிலிருந்து ஹக்மன வீதியினூடாக சுமார் 01 கி.மீற்றர் சென்று இடதுக்குத் திரும்பி ஹித்திட்டிய வீதியில் 300 மீற்றர் சென்று வலதுக்குத் திரும்பி குருந்துவத்த வீதியினூடாக சிறிது சென்றதும் குறிப்பிட்ட காணி வலது பக்கத்தில் இருக்கிறது.

**2ஆவது ஏலவிற்பனை மு.ப 11.15 மணி**

தென் மாகாணம், அம்பாந்தோடடை மாவட்டத்தில் கிழக்கு கிருவ பற்றுவில், அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், அம்பலாந்தோட்டை பிரதேச சபை எல்லைக்குள் போலான வடக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள போலான கிராமத்தில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எல்.கே.குணசேகரவினால் தயாரிக்கப்பட்ட 06.07.2005ஆம் திகதியிடப்பட்ட 3830ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் B என்ற முடிக்குரிய பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணி மற்றும் ஒரு றூட் பத்து பேர்ச்சஸ் (ஏ0.ரூ1.பே.10) கட்டடங்கள் மரங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் உட்பட அத்துடனான எல்லாம்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.எச். தர்மதாசவினால் தயாரிக்கப்பட்ட 03.10.2014ஆம் திகதியிடப்பட்ட அண்மைய வரைபட இலக்கம் 4823 இல் காணித்துண்டு B என்ற முடிக்குரிய பிரிக்கப்பட்ட மற்றும் வரைபட காணி மற்றும் றூட் பத்து பேர்ச்சஸ் (ஏ.0ரூ1.பே.10) விஸ்தீரணமுடையது.

இக்காணி பிரசித்த நொத்தாரிசு ஜி.பி.பரணவித்தானவினால் உறுதிப்படுத்தப்பட்ட 2018.04.10 ஆம் திகதியிடப்பட்ட 965 ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழ் ஈடுவைக்கப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி -** அம்பலந்தோட்டை மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியிலிருந்து ரிதியாகம வீதி வழியாக சுமார் 5.1கி.மீற்றர் தூரம் கொக்கல சந்தி வரைக்கும் சென்றது. வலது பக்கத்துக்குத் திரும்பி போலான வீதி வழியாக இன்னும் 400 மீற்றர் சென்று வலதுக்குத் திரும்பி பொலிஸ் நிலைய வீதியால் 50 மீற்றர் சென்றதும் இடதுகை பக்கத்தில் குறித்த இடம் அமைந்திருக்கின்றது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2019.12.13 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2019,12.12 ஆம் திகதிய லங்காதீப மற்றும் டெய்லி மீரர் பத்திரிகையிலும் மற்றும் தினக்குரல் 2019.12.20ஆம் திகதிய லங்காதீப மற்றும் டெய்லி மீரர் திருத்தம் பற்றிய அறிவிப்பு 2019.12.19 ஆம் திகதியிலும் பிரசரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள் 1000/-
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும். இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏல திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

**பிரதான முகாமையாளர். (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011/-2456479,011-2456488**

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9–i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம்: 071 4318252

# லுணுகலை பொலிஸ் பிரிவில் தீ: மூன்று வீடுகள் முற்றாக சேதம்





எம்.செல்வராஜா

லுணுகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டேல் பெத்தகிராமசேவகர்பிரிவின்சுவிண்டன்பெருந்தோட்டப் பகுதியில்பாடசாலைக்குஅருகாமையிலுள்ள6வீடுகளைக் கொண்ட தொடர் குடியிருப்பில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில் தொடர் குடியிருப்பிலுள்ள ஒரு வீட்டில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது அயலில் உள்ள இரண்டு வீடுகளுக்கும் தீ பரவியதால் 3 வீடுகளும் முற்றாக தீக்கிரையாகியுள்ளதோடு, வீட்டுத் தளபாடங்கள் அனைத்தும் எரிந்து சேதமடைந்துள்ளன.

சுவிண்டன் தோட்ட இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் பாரிய முயற்சியினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தீ பரவியமைக்கான காரணத்தை கண்டறிவதற்கான விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பலத்த சேதங்கள் ஏற்பட்டிருப்பதால், சேத விபரங்கள் மதிப்பிடப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

# லிட்டில்வெளி தோட்டத்தில் 110 பேருக்கு உறுதிப்பத்திரத்துடன் காணி வழங்கிவைப்பு





கம்பளை யோகா

கண்டி மாவட்டத்தில் லிட்டில் வெளி தோட்டத்தில் 110 குடும்பங்களுக்கு 8 பேர்ச்சஸ் காணி துண்டுகள் ஒப்பனையுடன் கடந்த 13ஆம் திகதி வழங்கப்பட்டன.

கண்டி மாவட்டத்தில் லிட்டில் வெளி தோட்டத்தில் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் தோட்டத்தில் ஒரு பகுதியை தனியார் ஒருவருக்கு கூறு போட்டு விற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது, லிட்டில்வெளி தோட்ட இளைஞர்கள். சிலரின் சிறந்த வழிகாட்டல்களுடன் அதற்கு எதிராக தமது எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் நடத்தி வந்தனர்.

இதேவேளை, பல கட்ட பேச்சு வார்த்தைகள் மற்றும் போராட்டங்கள் என்பவற்றின் பயனாக லிட்டில்வெளி தோட்டத்தில் வசிக்கும் 110 இவ்வாறு காணி வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலந்துகொண்ட லிட்டில்வெளி தோட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை போன்று கிறேட்வெளி தோட்ட மக்களுக்கு 3 ஏக்கர் காணி வழங்கப்பட்டபோது அது இன்னும் மக்களுக்கு பிரித்து கொடுக்கப்படவில்லை என்றும் அது தொடர்பாக எதிர்காலத்தில் நீதிமன்றம் சென்று மக்களுக்குரிய காணியை கொள்ளையர்களிடமிருந்து மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# எரிபொருள் விநியோகத்தால் பாதிக்கப்பட்ட போக்குவரத்து




(கினிகத்தேனை நிருபர்)

குயில்வத்தஎரிபொருள்நிரப்பும்நிலையத்தில் எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டதால், ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்திற்கு முற்றாக தடை ஏற்பட்டுள்ளது.

குயில்வத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பல நாட்களுக்கு பின் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் எரிபொருள் வழங்குவதற்கு டோக்கன்வழங்குதலில்இருவரிசைகள்அதிகரிக்கப்பட்டதால் வாகனங்கள் செல்லமுடியாது தடைப்பட்டு வாகனநெரிசல் ஏற்பட்டது.

இதனால் கொழும்பு - ஹட்டன் வீதியின் ஊடான போக்குவரத்து பல மணிநேரம் தடைப்பட்டதினால் பயணிகள் பல மணிநேரம் வீதியில் காத்திருந்து சிரமத்திற்குள்ளாகினர்.

# ஒரு மாதத்துக்கு பின் நுவரெலியாவில் லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விநியோகம்





செ.திவாகரன்

நாட்டில் கடுமையான தட்டுப்பாடாக காணப்பட்ட லிட்ரோ எரிவாயு கொள்கலன்கள் நேற்று (14) நுவரெலியா மக்களுக்கு வழங்கப்பட்டன.

நுவரெலியா பிரதான நகரத்தில் காணப்படும் லிட்ரோ எரிவாயு விநியோக நிலையங்களுக்கு சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக லிட்ரோ எரிவாயு விநியோகம் நடைபெற்றதால் பொதுமக்கள் அதனை பெற்றுக்கொள்வதற்கு அதிகாலையிலிருந்து நீண்ட வரிசையில் நின்று பெற்றுச் சென்றனர்

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தால் நேற்று வழங்கப்பட்டசிலிண்டர்களில் 120எரிவாயு சிலிண்டர்கள் கடைகளுக்கு வழங்கப்பட்டதாகவும் வரிசையில் காத்திருந்த அனைத்து மக்களுக்கும் எரிவாயுவை வாழங்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும் மக்கள் குற்றம் சுமத்தினர்.

# மன்னாரில் லிட்ரோ எரிவாயு விநியோக நடவடிக்கை முன்னெடுப்பு






(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் நேற்று (14) காலை தொடக்கம் லிட்ரோ எரிவாயு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மன்னார் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னாரிலுள்ள முகவர்கள் ஊடாக எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்க முடியாத நிலையில் பொதுவான ஓர் இடத்தில் வைத்து எரிவாயு விநியோகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக லிட்ரோ நிறுவன விநியோகத்தர்கள் தெரிவித்திருந்தனர்.

அதற்கமைவாக மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில்வைத்து குறித்த எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு குடும்ப அட்டைகளின்படி நேற்று விநியோகம் இடம்பெற்றது.

முதல் கட்டமாக 900 எரிவாயு சிலிண்டர்கள் இவ்வாறு மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று எரிவாயுவை பெற்றுகொள்ள முடியாதவர்களுக்கு விரைவில் உள்ளூர் முகவர்கள் ஊடாக எரிவாயு விநியோகம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கறுப்புச் சந்தையில் 1200 ரூபாவுக்கு டீசல் பெற்று அறுவடை செய்யவேண்டிய நிலையில் விவசாயிகள்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் டீசல் எரிபொருள் பங்கீடு சீராக நடைபெறாமையால் கறுப்புச் சந்தையில் 1,200 ரூபாவுக்கு டீசலை பெற்று சிறுபோக நெல்லை அறுவடை செய்யவேண்டிய நிலைக்குவிவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனியாமாவட்டத்தில் 12ஆயிரத்து 238ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சிறுபோகத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ளது. ஜூலை முதல் கிழமையிலிருந்து ஓகஸ்ட் கடைசிக் கிழமைவரை இந்த அறுவடை இடம்பெறும். இதற்காக கிட்டத்தட்ட 3 இலட்சத்திற்கு மேலதிகமான டீசல் எரிபொருள் தேவைப்படுகிறது. இதனை வாராந்தம் பகிர்ந்து வழங்குவதற்குநடவடிக்கைஎடுத்துள்ளதாக மாவட்ட செயலகத்தால் தெரிவிக்கப்பட்ட போதும், அறுவடைக்குத் தேவையான போதிய ளவிலான டீசல் வழங்கப்படவில்லை. இதுவரை 27,000 லீற்றர் டீசல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அறுவடை செய்யவேண்டிய நெல்லை ,200 ரூபாவுக்கு டீசலை பெற்றே அறுவடை செய்யவேண்டியுள்ளது.

யூரியா உரத்தை 42,000 ரூபாவுக்கும், அதிகரித்த விலையில் கிருமி மற்றும் களைநாசினிகளையும் பெற்று சிறுபோகத்தை மேற்கொண்ட விவசாயிகள் மாவட்ட செயலகத்தின் சரியான பங்கீடு முறைமை இல்லாமையால் கறுப்புச் சந்தையில் 1,200 ரூபாவுக்கு டீசலை பெற்று அறுவடை செய்யவேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் அவர்களை கேட்டபோது, மாவட்டத்தில் தற்போது எரிபொருள் நெருக்கடி உள்ளது. சிறுபோக அறுவடை சீராக நடைபெறாவிட்டால்சோற்றுக்கும் பஞ்சம் ஏற்படும். எனவே கனரக மற்றும் டிப்பர் வாகன சாரதிகள் சிறுபோகஅறுவடைக்காகவிவசாயிகள்டீசலைபெற விட்டுக் கொடுத்து உதவுமாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் டீசல் எரிபொருள் விநியோகிக்கும் போது கனரக மற்றும் டிப்பர் வாகனங்கள் அதிகமாக டீசலை பெற்றுக் கொள்வதனால் விவசாய தேவைக்கு டீசலை பெற முடியாதுள்ளது. தற்போது கட்டுமானப் பணிகள், குவாரி பணிகள் நிறுத்தப்பட்டுள்ள போதும் கனரக மற்றும் ரிப்பர் வாகனங்களுக்கு ஏன் அதிக டீசல்? அவ்வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவருமாறு வவுனியாமாவட்டசெயலகத்திடம் கோரியபோதும் அவர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்றும் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# சாவகச்சேரியில் உணவக வளாகத்திலிருந்து கைக்குண்டு மீட்பு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதி முதலாம் கட்டைப் பகுதியிலுள்ள பொன்னா உணவக வளாகத்திலிருந்து நேற்று முன்தினம் (13) கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

உணவக காணி வளாகத்தில் காணப்பட்ட கறையான் புற்றை வெட்டியபோதே குறித்த கைக்குண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காணி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கிய நிலையில், பொலிஸார் கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# காணாமல்போன 11வயதுச் சிறுவன் காட்டுப் பகுதியில் வைத்து மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 11வயதுச்சிறுவன் ஒருவர் கடந்த திங்கட்கிழமை (11) மதியம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட நிலையில் அன்றிரவு காட்டுப் பகுதி ஒன்றில் கட்டப்பட்ட நிலையிலிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

கடந்த திங்கட்கிழமை சிறுவனின் பெற்றோர் வேலைக்கு சென்ற சமயம் நாவற்குழி-ஐயனார் கோவில் பகுதியிலுள்ள பேத்தியார் வீட்டிற்கு சிறுவன் சென்றிருந்த நிலையில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் உறவினர்கள் இணைந்து சிறுவனை தேடிய போது அப்பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் கட்டப்பட்ட நிலையில் சிறுவன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# எதிர்வரும் இரு வருடங்களுக்குத் தெரிவாகும் ஜனாதிபதி அரசியல் நோக்கமற்ற பொறுப்புவாய்ந்தவராக இருக்கவேண்டும்

## பதவிக்காலம் முடிவடைந்ததும் அவர் அரசியல் வாழ்க்கையிலிருந்து ஓய்வுபெறுவது அவசியமென சம்பிக்க எம்.பி. வலியுறுத்து

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக இராஜினாமா கடிதத்தை ஒப்படைக்க வேண்டும். ஒப்படைத்தவுடன் புதிய ஜனாதிபதி, பிரதமர் தெரிவுசெய்யப்பட வேண்டும். எதிர்வரும் இரு வருடங்களுக்கு ஜனாதிபதி பதவிக்கு தெரிவுசெய்யப்படும் நபர் அதிக பொறுப்பு வாய்ந்தவராகவும், இரு வருடங்களில் பதவிக்காலம் முடிவடைந்ததும் அவர் அரசியலிருந்து ஓய்வு பெற்று செல்லக்கூடியவராகவும் இருக்க வேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் (13) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மீண்டும் பாரதூரமான நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. யார் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். இந்த நிலைக்கு முதலில் கோட்டாபய ராஜபக்ஷவே பொறுப்புக் கூறவேண்டும். அவர் வாக்குறுதி வழங்கியதைபோன்று அவரின் பதவியிலிருந்து விலகவில்லை. அதேபோன்று, இறுதிநேரம்வரை பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர், பாதுகாப்பு செயலாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரினூடாக இந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தை அடக்கவே முயற்சித்தார்கள். பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் மனக்குமுறல்களையும் அவர்களின் நிலைப்பாடுகளையும் பாதுகாப்புப் பிரிவினர் புரிந்துகொண்டதால் பாரிய இழப்புகளை தவிர்த்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிலிருந்து வெளியேறியிருந்தாலும், அவரின் இராஜினாமாவை முறையாக அறிவிக்கவில்லை. அரசயலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி வெளிநாடு சென்றால் அவருக்குரிய அதிகாரங்களை பிரதமருக்கு தற்காலிகமாக வழங்க முடியும். அதன்பிரகாரம் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதமரும் அறிவித்துள்ளார். அதேபோன்று ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்தால் பிரதமர் பதில் ஜனாதிபதியாக கடமையாற்ற முடியும். அதேபோன்று, உயர் நீதிமன்ற நீதியரசர் சபாநாயகருடன் இணைந்து புதிய ஜனாதிபதி ஒருவரை நியமிக்க முடியவில்லை, அந்த பொறுப்பை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அந்தப் பொறுப்பை பிரதமருக்கு வழங்க முடியும் . இந்த விடயங்கள் அலனைத்தும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவர்கள் இதுவரைகாலமும் அரசியலமைப்பை தமக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டு மக்களின் கோபத்தை சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள். ராஜபக்ஷ குடும்பம் மீதான மக்களின் அதிருப்தியினாலேயன்றி தனக்கிருந்த பெரும்பான்மைப் பலத்தினால் தான் பிரதமராக நியமிக்கப்படவில்லை என்பதை ரணில் விக்ரமசிங்க நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவருக்கு இருக்கும் வெளிநாட்டுத் தொடர்புகளை வைத்து நாட்டில் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பார் என்ற நம்பிக்கையின் காரணமாகவே அவர் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், அவ்வாறான எந்தத் தொடர்புகளும் இல்லை. மக்களின் கஷ்டத்தை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பது தற்போதைய நடவடிக்கைகளில் தெளிவாக தெரிகிறது. அதனால் ரணிலுக்கு எதிராகவும் மக்கள் மத்தியில் எதிர்ப்பலைகள் எழுந்துள்ளன.

தற்போதைய பிரதமருக்கு மக்களின் ஆதரவும் இல்லை, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலமும் இல்லை. அதனால், ரணிலும் தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு ராஜபக்ஷவாதியாக இருந்தாலும் அந்த பதவியை சபாநாயகருக்கு ஒப்படைத்திருக்க வேண்டும். காரணம், அவர் ஓர் அரசியல்வாதியாக செயற்படுவதற்கான அவசியமில்லை. அதன்பின்னர் அரசியலமைப்பின் பிரகாரம் உடனடியாக ஜனாதிபதியை நியமித்து அதனைத் தொடர்ந்து பிரதமரையும் நியமித்திருக்க வேண்டும்.

ஆனால், ஒருசிலர் விரைவாக பிரதமராகி திருட்டுத்தனமாக ஜனாதிபதியாக நியமனம் பெற முயற்சிப்பது கவலைக்குரியாகும். அதேபோன்று ஜனாதிபதி பதவியை பொறுத்தவரையில் அடுத்த இரு வருடங்களுக்கு இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படும் நபர் எதிர்வரும் காலங்களில் அரசியலில் இருக்காத நபராக அமைய வேண்டும் என்றே நாங்கள் கருதுகிறோம். குடும்பத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடுவார்களாக இருந்தால் அதனூடாக மக்களின் அபிப்பிராயம் நிறைவேறப் போவதில்லை.

அதனால், அடுத்த ஜனாதிபதி உண்மையான பொறுப்பு நிறைந்தவாரக இருக்கவேண்டும் என்பதை தெளிவாக தெரிவித்துகொள்ள விரும்புகிறோம். பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் எந்தவொரு அடிப்படையிலும் வேறு பதவிகளுக்கு தெரிவுசெய்யப்படாமல் ஓய்வு பெற வேண்டும். பதவியிலிருக்கும் காலத்தில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் சார்பாக செயற்படாது, நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் சர்வகட்சி சார்பான ஜனாதிபதியாக இருக்கவேண்டும் - என்றார்.

# ஜனாதிபதி மாளிகை

## பாதுகாப்புப் படையினர் வசம்





நாட்டில் கடந்த ஜுலை 09ஆம் திகதி பொதுமக்களால் முற்றுகையிடப்பட்ட ஜனாதிபதி மாளிகை நேற்று (14) முதல் மீண்டும் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறியுள்ளனர். கடந்த 09ஆம் திகதியின் பின்னர் தொடர்ச்சியாக ஜனாதிபதி செயலகம் பொதுமக்களின் வசமிருந்த நிலையிலேயே, நேற்று செயலகத்தை மீண்டும் பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற அமைதியின்மையினால் ஜனாதிபதி செயலகத்தின் சில பகுதிகள் மற்றும் தொல்பொருள் பெறுமதிமிக்க பொருட்கள் என்பன சேதமடைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. சில பொருட்கள் முறையாக பாதுகாக்கப்படாமல் தொடர்ந்து சேதப் படுத்தப்படுமாக இருந்தால் அவை முழுமையாக சேதமடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தொல்பொருள் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துவந்த தொடர் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் மூன்று நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் (13) நிறைவுக்கு வந்துள்ளது.

கடந்த புதன்கிழமை (06) பொதுநிர்வாக அமைச்சு வெளியிட்ட சுற்றுநிருபத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமக்கு தேவையான எரிபொருள் வழங்கக் கோரியுமே சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்படி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுத்து வரும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எரிபொருளின்றி சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், இதனால் அவர்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரி கடந்த 6 ஆம் திகதி பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய, நாடு முழுவதும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த திங்கட்கிழமை (11) முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொரு +ளாதார நெருக்கடி நிலையை கவனத்திற்கொள்ளாமல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக காலம், நேரம் பாராமல் வங்கி மற்றும் கிராமங்களில் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் பிரச்சினை இருப்பதாக சுட்டிக்காட்டிய புத்தளம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தங்களை மலினப்படுத்தும் வகையில் கண்டுகொள்ளாமல் இருப்பதும் வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்தத் தீர்மானம் பொதுமக்களை பழிவாங்கும் நோக்கம் அல்ல என்றும், தமக்கு தேவையான எரிபொருளை கோருவதே நோக்கமாகும் எனவும் தெரிவித்து தொடர் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கமைய நாளைமுதல் பணிக்குச் செல்ல தீர்மானித்துள்ளனர்.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளருக்கும், அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பு தற்காலிமாக கைவிடப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைகளை அத்தியாவசிய கடமைகளாக கருத வேண்டும். அவர்களுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை வேண்டும் எனவும் அதுபற்றி அமைச்சின் செயலாளரினால் அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக் கும் அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் எனவும் மேற்படி கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், அந்த அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதாக தெரிவித்து எழுத்து மூலம் தமக்கு வழங்க வேண்டும் எனவும் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் இரண்டு வாரங்களில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய எரிபொருளை வழங்குவதற்கு பிரதேச செயலாளர்கள் செயற்படாத பட்சத்தில் மீண்டும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பார்கள் எனவும் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சங்கத்தினர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதுபற்றி எழுத்துமூலம் உறுதிமொழி வழங்கிய மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர், மேற்படி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்குமாறும் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

# அரசாங்க அலுவலகங்களை கையளிப்பது ஜனநாயகத்துக்கு சிறந்த முன்மாதிரி

## அசாத் சாலி தெரிவிப்பு

மக்கள் போராட்டம் வெற்றியளித்துவரும் நிலையில், ஆட்சிமாற்றத்துக்கு இடமளிக்கும் வகையில் போராட்டக்காரர்கள் நடந்து கொள்வதுடன், அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக நடைமுறைகளுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ளவேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊழல்வாதிகளை விரட்டியடிக்கும் மக்கள் போராட்டம் வெற்றியின் இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளது. இந்நிலையில், வெற்றியின் அடையாளங்களாக ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் பிரதமரின் அலுவலகம் என்பவை வெற்றியாளர்களின் வசம் வந்துள்ளன.

ஜனாதிபதி நாட்டை விட்டுச் சென்றுள்ளதால் ஏற்பட்ட வெற்றிடம் அரசியலமைப்பின் பிரகாரமே நிரப்பப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை பதில் ஜனாதிபதி செய்யும் வகையில் இடமளிக்கப்படல் அவசியம். இதற்காகவே மக்கள் போராட்ட சக்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் இவ்விடங்களை ஒப்படைத்து விட்டு வெளியேற முன்வந்துள்ளனர். இதுதான், நாட்டில் இடம்பெற்ற ஜனநாயகப் போராட்டம் என்பதற்கான அர்த்தத்தை கற்பிக்கும்.

சட்டத்தரணிகள் சங்கம், சபாநாயகர் மற்றும் ஓபித தேரரும் இவ்விடங்களை ஒப்படைக்கும்படியே கோருகின்றனர். மாறாக ஒருசில கட்சிகளின் ஒற்றைப்பிடிவாதங்களுக்கு இடமளிப்பது, அவர்களது அதிகார ஆசைகளை குறுக்குவழியில் அடையும் வழிகளைத் திறந்துவிடலாம். இவ்வாறு நிகழ்ந்தால் மக்கள் போராட்டம் மலினமடையலாம்.

எனவே, ஜனநாயக செயற்பாடுகளுக்கு இடமளித்தும், இந்தக் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்தும் கைப்பற்றப்பட்ட அரசாங்க அலுவலகங்களை கையளிக்குமாறு தேசிய ஐக்கிய முன்னணி கேட்டுக்கொள்வதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துளிச் செய்திகள்

மஹஓய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிங்குரலந்த பகுதியில் மகனால் தடியொன்றினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மஹஓய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளதுடன், 60 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

★★★★★★★★★★★

ஹம்பாந்தோட்டைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட செனசிலிகமவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பதகிரிய பகுதியைச் சேர்ந்த 35 வயதான நபர் ஒருவரே பலியாகியுள்ளார். நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் காரணமாக நபர் ஒருவரால் அவர் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★★★★★★★

செவனகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுபிலவெள பகுதியில் 36 வயதான நபர் ஒருவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். காயமடைந்தவரின் நண்பர் ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் கடுமையான காயங்களுக்குள்ளான நபர் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

★★★★★★★★★★★

ஹொரணை பகுதியில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 53 கிராம் 250 மில்லிகிராம் தங்க நகைகள், 05 கைக்கடிகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

★★★★★★★★★★★

மாளிகாவத்தை, ஜும்மா மஸ்ஜித் வீதியில் 05 கிராம் 130 மில்லிகிராம் ஹெரோயினை தம்வசம் வைத்திருந்த 29 வயதான நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

★★★★★★★★★★★

மாளிகாவத்தை, சத்தர்ம மாவத்தையில் 05 கிராம் 560 மில்லிகிராம் ஹெரோயினை தம்வசம் வைத்திருந்த 34 வயதான நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

★★★★★★★★★★★

காலியில் நகைக்கடை ஒன்றை உடைத்து ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான நகைகள் மற்றும் மாணிக்கக்கற்களை திருடிச்சென்ற நபரை பொருட்கள் சகிதம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். உடுகம பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபர் ஒருவரே கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★★★★★★★

குளியாபிட்டிய, கய்யால பகுதியில் வீடொன்றுக்குள் புதையல் தோண்டிக்கொண்டிருந்த நிலையில் மூவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களில் இருவர் இராணுவ வீரர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# மட்டக்களப்பு - வவுணதீவு விவசாயிகளினால் இ.போ.சபை டிப்போ முன்பாக ஆர்ப்பாட்டம்

## மாவட்ட செயலகத்தின் தலையீட்டினால் இலங்கை போக்குவரத்து சபை டிப்போ மூலமாக 6300 லீற்றர் எரிபொருள் வழங்க நடவடிக்கை





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, வவுணதீவு விவசாயிகள் இலங்கை போக்குவரத்து சபை டிப்போ முன்பாக நேற்று (14) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கமைவாக வவுணதீவு பகுதியில் வேளாண்மையை மேற்கொண்டு அறுவடைக்கு தயாராகவுள்ள மண்டபத்தடி மற்றும் ஆயித்தியமலை ஆகிய கண்டங்களுக்கான டீசல் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாக விவசாயிகளுக்கான டீசல் வழங்கப்பட்டு வந்த நிலையில், நேற்று தமக்கான டீசல் தருவதாகக் கூறியும் தமக்கான டீசலை வழங்காமல் ஏனையவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக எதிர்ப்புத் தெரிவித்தும் விவசாயிகள் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போ முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பின்னர் குறித்த இடத்திற்கு வருகைதந்த மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத் மற்றும் மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ முகாமையாளர் ஆகியோருடன் விவசாய பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு கலந்துரையாடியதன் பின்னர் 6300 லீற்றர் டீசலினை கமநல திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இன்று (15) வழங்கப்படுமென வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து விவசாயிகள் குறித்த ஆர்ப்பாட்டத்தினை கைவிட்டிருந்தனர்.

விவசாயிகளுக்காக 6300 லீற்றர் டீசலை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டமையை முன்னிட்டு மாவட்ட செயலகத்திற்கும், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் உள்ளிட்டோருக்கு மாவட்ட விவசாயிகள் இதன்போது நன்றி தெரிவித்துள்ளனர்.

# கிழக்கு மாகாண ஆளுநருக்கு நிர்வாகம் தெரியாது

## அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் லோகநாதன்

(மாளிகைக்காடு நிருபர்)

மூவின மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரே கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் - என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

அரசியல் நடப்புகள் தொடர்பாக நேற்று (14) கல்முனையில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பரசூட்டுகளிலிருந்து ஆளுநர்களை இறக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்விதம் இறக்குமதி செய்யப்படுகின்ற ஆளுநர்கள் எதற்கும்



அருகதையற்றவர்களாகவும் உள்ளனர். அந்தந்த மாகாணங்களைச் சேர்ந்த பொருத்தமான நபர்களே வடக்கு, கிழக்குக்கு ஆளுநர்களாக நியமிக்கப்பட வேண்டும். அவர்களுக்குத்தான் எமது மக்களின் பிரச்சினைகள் தெரியும், புரியும். அவற்றை தீர்த்துத் தர அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷவால் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டவர்களின் பதவிகள் உடனடியாக வெறிதாக்கப்பட்டு பொருத்தமான புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் போன்றவர்களுக்கு நிர்வாகம் தெரியாது என்பது இன்னுமொரு விடயம். கிழக்கின் ஆளுநராக இதே மாகாணத்தைச் சேர்ந்த மூவின மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மருதமுனையில் விளையாட்டு மையம் திறப்பு



(மருதமுனை மேலதிக நிருபர்)

கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ்.எல்.எம்.நாசிறூன் ஏற்பாட்டில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் ஆகியோரினால் மருதமுனை ஹியுமன் லின்க் விளையாட்டு மையம் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

இதன்போது கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மருதமுனை ஹியுமன் லின்க் விளையாட்டு மையத்திற்குத் தேவையான ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பணிப்பாளர் ஏ.கமறுத்தீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.



# அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலய ஆனிப் பௌர்ணமி மகோற்சவ தீர்த்தோற்சவம்





(ஆலையடிவேம்பு நிருபர்)

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தின் ஆனிப் பௌர்ணமி மகோற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்று நடைபெற்றதுடன், பாற்குட பவனியும் 108 சத சங்காபிஷேகமும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

சிவபூமி என அழைக்கப்படும் ஈழமணித் திருநாட்டின் தென்கிழக்கில் வரலாற்றுச் சிறப்புடன் இயற்கை எழில் நிறைந்த அக்கரைப்பற்று பதிதனில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த இரு வருடங்கள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மகோற்சவம் இடம்பெறாத நிலையில் இவ்வருடம் மகோற்சவம் இடம்பெற்றது.

பாற்குட பவனியானது கோளாவில் ஸ்ரீ விக்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி ஸ்ரீ வம்மிடிப்பிள்ளையாரை அடைந்தது. அங்கு பாலாபிஷேகம் இடம்பெற்றதுடன், சங்காபிஷேகமும் நடைபெற்றது.

இதேநேரம் நேற்றுக் காலை பொற்சுண்ணம் இடிக்கும் கிரியைகளோடு தீர்த்தோற்சவ கிரியைகள் ஆரம்பமாகின. யாக பூஜைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, ஆலயத்தில் மூலமூர்த்திக்கான பூஜை இடம்பெற்றதுடன், வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகப்பெருமானுக்கு விசேட அலங்கார பூஜை நடைபெற்றதன் பின்னர் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் அமர்த்தப்பட்ட விநாயகப்பெருமான் பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ பிரதான வீதிகளினூடாக வங்கக்கடல் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு நாதஸ்வர மேள ஒலி முழங்க அடியார்களின் பிரார்த்தனையுடன் இடம்பெற்ற கிரியைகளை தொடர்ந்து தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.

கடந்த 02ஆம் திகதி வாஸ்து சாந்தி கிரியைகளுடன் ஆரம்பமாகி 03ஆம் திகதி இடம்பெற்ற பிராயசித்த கும்பாபிஷேகம் 04ஆம் திகதி இடம்பெற்ற கொடியேற்றம் 11ஆம் திகதிவரை இடம்பெற்ற திருவிழாக்கள் 12ஆம் திகதி இடம்பெற்ற பாற்குடபவனி 13ஆம் திகதி இடம்பெற்ற தீர்த்தோற்சவம் கொடியிறக்கத்துடனும் இடம்பெறும் திருப்பொன்னூஞ்சல் பூங்காவனத்திருவிழா, 15ஆம் திகதி இடம்பெறும் வைரவர் பூசையுடனும் நிறைவுறும்.

ஆலயத்தலைவர் வி.சுகிர்தகுமார் தலைமையில் இடம்பெற்ற மகோற்சவத்தின் வழிபாட்டுக் கிரியைகள் யாவற்றையும் அக்கரைப்பற்று பகுதி ஆதினகுரு இலி பழனிவேல் குருக்கள் ஆசியுடன் கிரியாகிரம ஜோதி அலங்கார பூசனம் சிவாகமபானு அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ சு.சுதர்சன் குருக்கள் மற்றும் சாதக இளஞ்சுடர் சிவஸ்ரீ சுதன் சர்மா ஆலய குரு ப.கு.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தி வருகின்றனர். இவ்வருடம் விசேடமாக கல்வித்தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டதுடன், நாளாந்தம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்தது.

# மண்டூர் குருமண்வெளி இயந்திர படகுச்சேவையை எரிபொருளின்மையால் இடைநிறுத்தவேண்டிய நிலை



(மண்டூர் நிருபர்)

மக்களின் நன்மை கருதி படுவான்கரை பிரதேசத்தில் இயங்கிவரும் மண்டூர் குருமண்வெளி இயந்திரப் படகுச்சேவையை எரிபொருள் இன்மையால் இடைநிறுத்த வேண்டிய நிலை உள்ளதாக ஒப்பந்தக்காரர் தெரிவித்துள்ளார்.

இரு தினங்களுக்கு மாத்திரம் இயந்திரப் படகுகளை இயக்குவதற்கான எரிபொருள் கையிருப்பில் உள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினால் இந்த இயந்திரப் படகினூடாக பொதுமக்கள் இலகுவாக போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர். இந்த இயந்திரப் படகுச்சேவை இடைநிறுத்தப்பட்டால் பிரதேசவாசிகள் பல சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிவரும் நிலை ஏற்படும்.

எனவே, இந்த இயந்திர படகுச்சேவையை இடைநிறுத்தாமல் தொடர்ந்து இயங்குவதற்கு உரிய அதிகாரிகள் எரிபொருளை பெற்றுக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# கல்முனை சாஹிரா மாணவன் ஆக்கில் கான் சதுரங்கப் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை பாடசாலை சதுரங்க சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சதுரங்கப் போட்டி அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் இடம்பெற்றது. இப்போட்டி கடந்த 08, 09 ஆகிய திகதிகளில் மட்டக்களப்பு மட்/ மெதடிஸ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

ஐந்து சுற்றுகளாக இடம்பெற்ற இச்சதுரங்க சுற்றுப்போட்டியில், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி இரு மாணவர்கள் பங்குபற்றினர். அதில் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஐ.கே. முஹம்மட் ஆக்கில் கான் ஐந்து போட்டிகளில் விளையாடி ஐந்து வெற்றிகளைப் பெற்று அந்தப் பிரிவில் முதல் (Champion) இடத்தைப் பெற்றுக்கொண்டார். அதனோடு எம்.ஜே.இஸ்ஸத் ஸஹ்மி போட்டியில் கலந்துகொண்டமைக்கான



சான்றிதழையும் பெற்றார்.

இதில் வெற்றிபெற்றதன் மூலம் எதிர்வரும் ஓகஸ்ட் 05ஆம் திகதி புத்தளத்தில் நடைபெறவிருக்கும் தேசிய சதுரங்கப் போட்டிக்கு ஐ.கே.முஹம்மட் ஆக்கில்கான் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# போரதீவுப்பற்று கல்வி அபிவிருத்திக்கு 'கரம் கொடுப்போம்' அமைப்பு உதவி

(கல்லடி நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்தில் 32 ஆரம்பப் பாடசாலைகளில் 620 மாணவர்கள தரம் 5இல் கல்வி கற்று வருகின்றனர். இவர்கள் இவ்வருடம் (2022) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில் இம் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் முகமாக கரம் கொடுப்போம் அமைப்பு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாக்களை தயாரித்து வழங்குவதற்கான அனுசரணையை வழங்கியிருந்தனர்.

இதனடிப்படையில் மாதிரிப் பரீட்சைப் பொதிகளை "கரம் கொடுப்போம்" அமைப்பின் உறுப்பினர்களான யோகராசா ஜெயரூபன், மகேந்திரன் கவிஞன் ஆகியோர் பட்டிருப்பு கல்வி வலயத்தின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாசா மற்றும் பட்டிருப்பு கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.திவிதரன் ஆகியோரிடம் கையளித்தனர்.

இப்பொதிகள் மாணவர்களைச் சென்றடைவதற்காக பட்டிருப்பு கல்வி வலயத்தின் திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பளார் திருமதி த.இராஜசேகர் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பா.வரதராஜனிடம் ஒப்படைத்தார்.

# கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா - 2022

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கையின் இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் மீண்டும் மாற்றுத்திறனாளிகளை பேசுபொருளாக்கும் நோக்கோடு மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழா இவ்வருடம் 2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ளதாக மட்டக்களப்பில் டேட்டா சரிட்டி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

டேட்டா சரிட்டி (DATA Charity), மட்டக்களப்பு மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்தும் இந்த விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இருந்து 1000இற்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த விளையாட்டு விழாவுக்கு பிரதான அனுசரணையை அபிடயமன்ட், ராஜ் கிளஸ்டர் மற்றும் லிங்க்ஸ் லீகல் ஆகிய தொண்டு நிறுவனத்தினர் வழங்கவுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து 26 மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளும், அம்பாறையிலிருந்து 08 மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளும், திருகோணமலையிலிருந்து 04 மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளும் இந்த விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளவுள்ளன.

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும்





மாற்றுத்திறனாளிகளின் அடிப்படைத்தேவையாக உள்ள அனைத்து வசதிகளும்கொண்ட பராமரிப்பு நிலையத்தை உருவாக்க அனைவரும் இணைந்து உதவிவேண்டும் என்ற பரப்புரையை இந்த ஆண்டு விளையாட்டு விழாவில் நாம் முன்வைக்கின்றோம்.

தமிழ் பரா விளையாட்டு விழாவானது 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மிக பிரம்மாண்டமாக நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2020ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு இருந்தன. கொவிட் பரவல் காரணமாக இடையில் நிறுத்தப்பட்டு, இப்போது மீண்டும் மட்டக்களப்பில் நடைபெறுகின்றன.

தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியின் முதல் அங்கமாக பார்வை இழந்தவர்களுக்கான சத்த பந்து கிரிக்கட்போட்டி இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் மட்டக்களப்பை தளமாக கொண்டியங்கும் உதயம் விழிப்புலனிழந்தோர் சங்கத்தினரும், யாழ். விழிப்புலனிழந்தோர் சங்கத்தினரும் பங்குபற்றுகின்றனர்.

இந்த விளையாட்டு விழாவிற்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம், விளையாட்டு திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் உதவி புரிகின்றன. அவர்களுக்கும் எமது DATA charity நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஹமீட் நிறுவனத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் கே.ஜீவராஜா, டேட்டா அமைப்பின் பணிப்பாளர் ரீ.விநாயகமூர்த்தி, கமீட் திட்ட பணிப்பாளர் கே.காண்டீபன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு இடம்பெறவுள்ள தமிழ் பரா விளையாட்டு விழா தொடர்பாகவும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாகவும் தமது கருத்துகளை பகிர்ந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தாழங்குடா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விவசாயிகளுக்கு லீ. 5000 எரிபொருள் விநியோகம்!



(மட்டக்களப்பு நிருபர்)

ஆரையம்பதி, தாழங்குடா லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (13) மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் விவசாயிகளுக்கான டீசல் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது கொக்கட்டிச்சோலை மற்றும் தாந்தாமலை கமநல சேவை நிலையத்திற் குட்பட்ட 5 விவசாய கண்டங்களுக்கான 5000 லீட்டர் டீசல் வழங்கப்பட்டுள்ளது.

இதில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி, இராணுவ அதிகாரிகள் மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

# அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை இயந்திரங்களின் கூலி அதிகரிப்பு

### ஏக்கருக்கு சுமார் ரூ.19,000 அறவிடுவதால் விவசாயிகள் அசௌகரியம்

(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, பொத்துவில் மற்றும் ஏனைய சில இடங்களிலும் வேளாண்மை அறுவடை ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகிறது. இருந்தபோதிலும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் அறுவடை இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதுடன், மிகக் கூடுதலான கூலியும் அறவிடப்பட்டு வருகிறது.

உரத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு அதன் விலையேற்றத்தினை எதிர்கொண்டு விவசாயச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள், பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை. அதற்கான விலையேற்றமும் இல்லை. இவ்வாறிருக்க, ஒரு ஏக்கருக்கு சுமார் 19,000 ரூபா அறுவடை இயந்திரக் கூலியாகவும், நெல் கட்டும் தொழிலாளர்களுக்கு ஏக்கருக்கு 3,000 ரூபாவும் அறவிடப்பட்டு வருகின்றது.





மிகக் கூடுதலான கூலி அறவிடப்பட்டு வருகின்ற போதிலும் வேளாண்மை அறுவடை செய்வதற்கு எரிபொருள் வழங்குபவர்களுக்கு மாத்திரமே அறுவடை என்ற அடிப்படையிலேயே அறுவடை இடம்பெற்று வருகிறது. எரிபொருள் வழங்க முடியாதவர்களின் வேளாண்மை அறுவடை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கமநல சேவை நிலையங்களினால் விவசாயிகளுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ள வழங்கப்பட்டுள்ள அனுமதிகளுக்கு இதுவரை எரிபொருள் வழங்கப்படவில்லை.

எனவே, வேளாண்மைகளை அறுவடை செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட செயலாளர் மற்றும் கமநல அதிகாரிகளிடம் அம்பாறை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இளைஞர்களிடமுள்ள சமூக பொறுப்பின் வடிவமே இன்றைய போராட்டங்கள்

### கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர்

(மாளிகைக்காடு நிருபர்)

எமது நாட்டில் இன்றைய ஜனாதிபதி யார், பிரதமர் யார், நாட்டின் நிர்வாகம் யார் கையில் இருக்கிறது என்று தெரியாத நிலையிலேயே இலங்கையர்களாகிய நாம் இருந்து கொண்டிருக்கின்றோம். அப்படியான குழப்ப நிலை எமது நாட்டில் நிலவி வருகிறது. இந்த நிலை மாறி இதிலிருந்து விடுதலை பெற்று நமது நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட வேண்டும். நாட்டை ஊழலிலிருந்து விடுதலை செய்து மீட்க வேண்டும் என நினைத்து இளைஞர்கள் வீதிக்கு இறங்கி போராடி வருகிறார்கள். இளைஞர்களுக்கு நிறைய குடும்பப் பொறுப்பு இருக்கிறது. அதன் அடுத்த கட்டமாக சமூக பொறுப்பும் இருக்கிறது. அந்த சமூக பொறுப்பின் வடிவமாகவே இன்றைய போராட்டங்கள் அமைந்துள்ளதாக நான் பார்க்கிறேன் - என கல்முனை மாநகர பிரதி முதல்வரும் ரஹ்மத் மன்சூர் பௌண்டேசனின் ஸ்தாபகப் பணிப்பாளருமான ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நேற்று முன்தினம் இரவு (13) இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இளைஞர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது, இளைஞர்களின் சக்தியை கெடுக்க பல்வேறு சக்திகள் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை செய்து



வருகின்றன. அதில் போதைப்பொருள் முக்கிய இடம்வகிக்கிறது. போதைப்பொருள் பாவனை, சுயமரியாதை, குடும்ப கௌரவத்தை மட்டுமின்றி தலைமுறைதாண்டிய அழிவை ஏற்படுத்தக் கூடியது. விளையாட்டு வீரன் ஒருவன் இந்த செயலில் இறங்கமாட்டான். விளையாட்டு உடலுக்கு மட்டுமின்றி உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி தரக்கூடியது. அதனால் விளையாட்டு எல்லோருக்கும் அவசியமாகிறது.

இன்றைய இளைஞர்கள் பெரியோர்களுக்கு வழிகாட்டியாக மாறியிருக்கிறார்கள். அதன் ஒரு பகுதியாகவே நாட்டில் மாற்றம் வேண்டி போராடும் போராட்ட இளைஞர்கள் எமது அரசியல்வாதிகளுக்கு நாட்டை எப்படி கொண்டுசெலுத்த வேண்டும் என்று பாடம் எடுத்து கேள்வி கேட்டதை காண்கிறேன். சரியான பாதையில் சமூகத்தை இளைஞர்கள் வழிநடத்த வேண்டும். இன்றைய காலத்தில் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. அதில் இருக்கும் தீமைகளை தவிர்த்து நல்லவைகளை எடுத்து அதனூடாக நாம் நம்மை வளப்படுத்திக்கொள்ள வேண்டும். வேறு எங்கோ நடக்கும் விடயங்களை நாம் இங்கிருந்து பல்வேறு ஊடகங்களின் வாயிலாக காண்கிறோம். சமூக வலைத்தளங்களை முறைகேடாக பயன்படுத்தக்கூடாது. விளையாட்டினூடாக இளைஞர்களிடம் மாற்றத்தை கொண்டுவருவதற்காக பிரதேச விளையாட்டுத்துறையை மேம்படுத்த நான் தயாராக இருக்கிறேன்.

கொரோனாவினால் 02 வருடங்கள் நாங்கள் முடங்கிவிட்டோம். இப்போது பெற்றோல், அத்தியாவசியப் பொருட்கள் என எல்லாவற்றுக்கும் வரிசையில் நிற்கும் முக்கியமான காலகட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். இந்த நிலையிலிருந்து விடுபட்டு இலங்கையர்களின் எதிர்காலம் பிரகாசமாக அமைய இறைவனின் ஆசீர்வாதத்துடன் நிலையான ஒழுங்கான அரசியல்மாற்றம் இப்போது அவசியமாகிறது - என்றார்.

# சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழக வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய சீருடை அறிமுக நிகழ்வும்



(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் (Eastern Fighters) கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் புதிய சீருடை அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் (13) சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் மன்ற பயிற்சி நிலையத்தில் விளையாட்டுப் பாட ஆசிரியரும், கழக அமைப்பாளருமான எம்.எச்.எம்.முஸ்பீக் மற்றும் கழக முகாமையாளர் அப்ரத் அலி ஆகியோரின் நெறிப்படுத்தலில் கழக செயலாளர் லாபீர் முஹம்மட் ஷிப்னாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர பிரதி முதல்வரும், ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் கலந்துகொண்டு கழக சீருடையை அறிமுகம் செய்து வைத்தவுடன் கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்களையும், கழக மேம்பாட்டுக்கான உதவித்தொகையையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக சம்மாந்துறை நிலையத்தின் விரிவுரையாளர் எம்.பி.நௌஸாத், கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவையின் பணிப்பாளர் ஊடகவியலாளர் யூ.எல்.என்.ஹுதா, சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளன செயலாளரும், விளையாட்டு உத்தியோகத்தருமான ஏ.எம்.ரிஷாட் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தியதுடன், 19 வயதிற்குட்பட்ட அம்பாறை மாவட்ட அணிக்குத் தெரிவான வீரர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

மேலும் நிகழ்வின் விசேட அதிதிகளாக




நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்த பிஸ்மில்லாஹ் ஹோட்டல் சார்பிலான பிரதிநிதிகள், ரஹ்மத் பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் அகில் மன்ஸூர், சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரியும் இளைஞர் சேவை அதிகாரியுமான எம்.டீ.எம். ஹாரூன், டொப் குயின் நிறுவன உரிமையாளர் எம்.மர்லியாஸ், சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் கழகத் தலைவர் எம்.சுபைர், ரெட் மெக்ஸ் உரிமையாளர் ஏ.என்.எம்.ஜலூத், கடாகோ ஏ.எம்.வஸீர், சன்பிளவர் விளையாட்டுக் கழக செயலாளர் அஸ்வர் அப்துல் ஸலாம், மியண்டாட் விளையாட்டுக்கழக அணித் தலைவர் ஏ.எச்.எம்.முர்ஸித் மற்றும் ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஆழ்கடலில் தத்தளித்த வாழைச்சேனை மீனவர்கள் மீட்பு

(மீராவோடை நிருபர்)

ஹம்பாந்தோட்டை ஆழ்கடலில் தத்தளித்த வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளதாக துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க இயந்திரப் படகில் மூன்று மீனவர்கள் சென்றிருந்தனர். இவ்வாறு சென்ற இயந்திரப் படகின் என்ஜின் பழுதடைந்ததால் மூன்று மீனவர்களும் ஹம்பாந்தோட்டை



கடற்பரப்பில் தத்தளித்துள்ளனர்.

இவ்வாறு தத்தளித்த மூன்று மீனவர்களும் கப்பல் ஒன்றின் மீது நேற்று முன்தினம் மீட்கப்பட்டு, காலி துறைமுகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மீனவர்கள் சென்ற 34 அடி நீளமான இயந்திரப் படகை கரைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. பட்டிப்பளை புளியடி ஸ்ரீ வைரவர் ஆலய சடங்கு உற்சவம்

(கல்லடி நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு-பட்டிப்பளை, புளியடி அருள்மிகு ஸ்ரீ வைரவர் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவம் இன்று (15) வெள்ளிக்கிழமை முன்னிரவு பூர்வாங்கக் கிரியைகள் மற்றும் திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 21ஆம் திகதி மாலை அம்மனுக்கான சர்க்கரை அமுது கொடுத்தலுடன் நிறைவு பெறவுள்ளது.

நாளை 16ஆம் திகதி பட்டிப்பளை ஸ்ரீ மாவடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து மகர தோரண ஊர்வலம் ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையவுள்ளது. 20ஆம் திகதி ஊர்காவல் பண்ணலும் இடம்பெறவுள்ளது.

ஆலய உற்சவக் கிரியைகள் யாவும் கிரியைகால குரு ஜோதிட சிவஸ்ரீ அ.கு.லிகிர்த ராஜ குருக்கள் தலைமையில் உற்சவகால பிரதம பூசகர் சிவஸ்ரீ க.கோபாலபிள்ளை ஐயா மற்றும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தி.சானுஜன் ஐயா ஆகியோரால் நிகழ்த்தப்படவுள்ளன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடி அமாவாசை கொடியேற்றம்



(கல்லடி நிருபர்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்றம் கடந்த திங்கட்கிழமை (11) சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில், ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெற்றது.


கடந்த வருடம் ஆடிவேல் உற்சவம் கொரோனா தாக்கம் காரணமாக நடைபெறவில்லை. இம்முறை இதனை வெகு சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

இந்த உற்சவம் 17 நாட்கள் நடைபெற்று, ஜூலை மாதம் இருபத்தெட்டாம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறவுள்ளது.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு, பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று, நான்கு கால பூஜைகள் நடத்தப்பட்டு ஆடி அமாவாசை உற்சவமும் இடம்பெற்று வருகிறது.

தினமும் பகலில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

## போடியார் புலம்பல்!




**சபாநாயகர் யாப்பாவும் நல்லா பக்கவாத்தியம் கோட்டாவுக்கும், ரணிலுக்கும் பாடுறாரு எலுவா?**

**அந்த பதவி விலகல் கடிதம் சிங்கப்பூருக்கு கோட்டா போய் சேர்ந்த புறகுதானாம் தமக்கு அனுப்புவாரம் எண்டு இப்ப கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஒரு குண்ட தூக்கி போட்டுள்ளார். முந்தி மாலதீவுல வைச்சி இப்ப சிங்கபூருல வைச்சி இனி அமரிக்காவில வைச்சு எண்டு நல்லா காதுல பூசுத்திராரு எலுவா..? இனி சபாநாயகருட ஊட்டுக்கு முன் போராட்டம் எண்ட செய்தி வந்தாலும் வரும் மெய்யா..! மெய்யா..!**

# கல்முனை மஸ்ஜிதுர் ரஹ்மானியா பள்ளிவாசலின் நிர்மாணத்துக்கு ரஹ்மத் பவுண்டேஷன் நிதியுதவி





(கல்முனை நிருபர்)

கல்முனை அல்மஸ்ஜிதுர் ரஹ்மானியா பள்ளிவாசலின் மூன்றாம் மாடி பகுதியினை (கட்டிடம்) பூரணப்படுத்துவதற்கான நிதி உதவியாக ரூபா பத்து இலட்சம் காசோலை ரஹ்மத் பவுண்டேஷன் மூலம் வழங்கப்பட்டது.

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரிடம் குறித்த மஸ்ஜிதுர் ரஹ்மானியா பள்ளிவாசலினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு இப்பள்ளிவாசலின் மூன்றாம் மாடி பகுதியினை (கட்டிடம்) பூரணப்படுத்துவதற்கான நிதி உதவியாக ரூபா பத்து இலட்சம் காசோலை வழங்கப்பட்டது.

மஸ்ஜிதுர் ரஹ்மானியா பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மஸ்ஜிதுர் ரஹ்மானியா பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.அப்துல் மஜீட், பொருளாளர் எம்.ஜமால்டீன், உதவிச் செயலாளர் எம்.பெறோஸ் மற்றும் ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் உறுப்பினர்கள், எஸ்எல்.எம்.ஜெஸீல், பொதுமக்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் ரஹ்மத் மன்சூர் உரையாற்றுகையில், இப்பள்ளியின் மூன்றாம் மாடி கட்டிடத்தினை பூரணப்படுத்துவதற்காக பெரிதும் பங்களிப்புச் செய்துவரும் Y.W.M.A. பேரவைக்கு தனது ஊர்மக்கள் சார்பாக தனது விசேட நன்றியினையும் தெரிவித்துக்கொண்டார்.

# ஸ்டாலினுக்கு கொரோனா: மருத்துவமனையில் சேர்ப்பு



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து அவர் சென்னை காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சருக்கு செவ்வாயன்று கொரோனா உறுதிசெய்யப்பட்ட நிலையில், அவர் வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டார். இந்நிலையில், ஆழ்வார்ப்பேட்டை காவேரி மருத்துவமனையில் முதலமைச்சருக்கு நேற்று சிடி ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டதில், 10% நுரையீரல் தொற்று கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர்களின் அறிவுறுத்தலின்பேரில் சேர்க்கப்பட்ட முதலமைச்சருக்கு கொரோனா தொற்று அறிகுறிகள் தொடர்பான சிகிச்சை அளிப்பதாகவும், அவர் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருப்பார் என்றும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

24 மணி நேரத்திற்குப் பின்னரே முதலமைச்சர் வீடு திரும்புவார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அதிநவீன ஏவுகணைகள் மூலம் ரஷ்யப் படை தாக்குதல்

## ஒரேநாளில் 420 உக்ரைன் வீரர்கள் கொன்று குவிப்பு



உக்ரைனில் அதிநவீன ஏவுகணைத் தாக்குதல் மூலமாக ஒரே நாளில் 420 உக்ரைன் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்தப் போர் இன்று 140ஆவது நாளை கடந்து தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

ரஷ்யத் தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ், துறைமுக நகரான மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன், 87 இலட்சத்துக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

கிழக்கு உக்ரைனை கைப்பற்றுவதற்காக வேகமாக முன்னேறிவரும் ரஷ்யப் படைகள் நாட்டின் பிற பகுதிகளிலும் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றன. இந்நிலையில், தெற்கு உக்ரைனில் இருக்கும் மைக்கோலைவ் நகரில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதல்களில் ஒரே நாளில் 420 உக்ரைன் வீரர்கள் உயிரிழந்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்ய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மைக்கோலைவ் நகரிலுள்ள கப்பல் கட்டும் தளத்தில் ரஷ்யப் படைகள் அதிநவீன ஏவுகணைகளைக்கொண்டு துல்லியமாக தாக்குதல் நடத்தியதாகவும், இதில் 350 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மைக்கோலைவ் நகரில் இருக்கும் தாற்காலிக இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட துல்லிய தாக்குதலில் 70 உக்ரைன் வீரர்கள் உயிரிழந்திருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. உக்ரைன் இராணுவம் ஆதிக்கம் மிகுந்த பகுதிகளில் தாக்குதல் தீவிரப்படுத்தப்படும் என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

**உக்ரைனின் 3 இராணுவ ஜெட் விமானங்களை சுட்டு வீழ்த்திய ரஷ்யா**

மேலும், உக்ரைனின் மூன்று இராணுவ ஜெட் விமானங்களை ரஷ்யப் படைகள் சுட்டு வீழ்த்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைன் விமானப்படையில் பயன்படுத்தப்பட்ட சோவியத் காலத்து ஜெட் விமானங்களான Su-25 மற்றும் Su-24 விமானங்கள் கிழக்கு உக்ரைனின் டோனெட்ஸ்க் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் வடிவமைத்த மற்றொரு போர் விமானமான MiG-29 மைகோலைவ் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# உலக செய்திகள்

# பிரபஞ்சத்தின் அற்புதம்: பால்வெளியில் தண்ணீர்





பூமியிலிருந்து பல இலட்சம் மைல்கள் தொலைவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி, பிரபஞ்சத்தை அற்புதமாக படம் பிடித்திருப்பதை நாசா வெளியிட்டுள்ளது.

ஐரோப்பா, கனடா விண்வெளி ஆய்வு அமைப்புகளுடன் இணைந்து 'ஜேம்ஸ் வெப்' என்ற விண்வெளி தொலைநோக்கியை ரூ. 79.6 ஆயிரம் கோடியில் நாசா உருவாக்கியுள்ளது.

உலகின் மிகப்பெரிய இந்த தொலைநோக்கி, தென் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானாவிலுள்ள ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து 5 ரொக்கெட்டுகள் மூலம் கடந்த டிசம்பர் மாதம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. பூமியிலிருந்து 10 இலட்சம் மைல் தொலைவில் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி எடுத்து அனுப்பிய பிரபஞ்சத்தின் முதலாவது வண்ணப்படத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் வெளியிட்டார். இதற்குமுன் இப்படி படம் எடுக்கப்பட்டதில்லை. இதில், 'பிரபஞ்சம் வெள்ளை, மஞ்சள், ஆரஞ்சு மற்றும் சிகப்பு நிறங்களில் புள்ளிகள், கோடுகள், சுருள்கள், சூழல்கள் என வண்ணமயமாக காட்சி அளிக்கிறது' என்று நாசா நிர்வாகி பில் நெல்சன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பால்வெளி மண்டலத்தில் சுற்றிவரும் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டறிந்துள்ளதென நாசா தெரிவித்துள்ளது.

# இலங்கையின் நெருக்கடிக்கு ரஷ்யாதான் காரணம்

## உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி குற்றச்சாட்டு



இலங்கையின் தற்போதைய நிலைக்கு உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையும் ஒரு காரணம் என்று உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு 5 மாதங்களைக் கடந்து தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. உலகின் பல்வேறு நாடுகளுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் இரு நாடுகள் போரிட்டு வருகின்றன.

இந்நிலையில், தென் கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்ற ஆசிய தலைமைத்துவ மாநாட்டின்போது உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, ரஷ்யப் படையெடுப்பு குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை குறித்தும் பேசினார்.

அப்போது, உலகளாவிய உணவு நெருக்கடி மற்றும் பணவீக்கத்தை ரஷ்யா உருவாக்கி வருகிறது. கருங்கடல் பகுதியை ரஷ்யா முற்றுகையிட்டுள்ளதால் ஏற்றுமதி தடைப்பட்டுள்ளது.

அந்தவகையில், இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையும் ஒரு காரணம். உணவு மற்றும் எரிபொருட்கள் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடுதான் ஒரு சமூகப் புரட்சிக்கு காரணமானது. இது எப்படி முடிவடையும் என்று இப்போது யாருக்கும் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

**ஒடேசா துறைமுகத்தில் 2 கோடி தொன் தானியங்கள் தேக்கம்**

உக்ரைனின் ஒடேசா துறைமுகத்தில் உலகச் சந்தைக்கான 2 கோடி தொன் தானியங்கள் சிக்கியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.

உக்ரைனின் ஐம்பது சதவீதத்திற்கும் மேலான ஏற்றுமதி அதன் முக்கிய கருங்கடல் துறைமுகமான ஒடேசா வழியாக அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# சீனா - பாகிஸ்தான் கடற்படைகள் 4 நாட்கள் கூட்டு போர்ப் பயிற்சி



பசுபிக் பெருங்கடலில் சீனா, பாகிஸ்தான் கடற்படைகள் கூட்டு போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

ஷங்காய் நகரில் இராணுவ துறைமுகம் அருகே கடல் காவலர்கள்-2 எனும் பெயரில் நான்கு நாட்கள் நடைபெறும் கூட்டுப்பயிற்சி, பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது, செயற்பாட்டு திறனையும் அனுபவத்தையும் பரிமாறிக்கொள்வது, இரு நாடுகள் இராணுவத்திற்கு இடையிலான பாரம்பரிய நட்புறவை மேம்படுத்துவது உள்ளிட்டவை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தூக்கத்தில் அச்சுறுத்தும் 'ஸ்லீப் அப்னியா'




'ஸ்லீப் ஆப்னியா' என்ற வார்த்தை கடந்த சில ஆண்டுகளாகத்தான் பரிச்சயமாகத் தொடங்கியுள்ளது. எளிமையாகச் சொல்ல வேண்டுமானால் தூக்கத்தில் ஏற்படும் சுவாசக் குறைபாட்டைத்தான் அவ்வாறு அழைக்கிறோம்.

பொதுவாகவே குறட்டைவிட்டு தூங்கினால் ஆழ்ந்து உறங்குவதாக நம்மில் பலரும் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறோம். தூக்கத்தின்போது ஏற்படும் சுவாசத் தடைகள்தான் குறட்டை ஒலியாக வெளிப்படுகிறது. இதனை முறையாக கவனித்து சிகிச்சை பெறாவிட்டால், அது மூச்சுத்திணறலாக மாறி உயிரைப் பறிக்கவும் வாய்ப்புள்ளது. இந்தப் பிரச்சினையைத்தான் 'ஸ்லீப் ஆப்னியா' எனக் கூறுகிறது மருத்துவ உலகம்.

இந்தியாவில் மட்டும் 5 கோடி பேருக்கு அத்தகைய பாதிப்பு உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

**'ஸ்லீப் ஆப்னியா' அறிகுறிகள்**

• தூக்கத்தில் குறட்டை • பகல் நேரத்தில் தூக்கம், சோர்வு. • தூக்கத்தின்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு விழிப்பது • காலை எழுந்தவுடன் தலைவலி, தொண்டை வறட்சி., • மனநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் • சில நேரங்களில் தூக்கமின்மை.

**காரணங்கள்**

• உடல் பருமன் • தூக்கக் குறைபாடு, • இரவில் கண்விழித்தல் • இரைப்பை அழற்சி • சுவாசப் பாதை பாதிப்புகள் • மூக்கு, தொண்டை சார்ந்த நோய்கள்.

**பரிசோதனை**

பொதுவாக ஒருவருக்கு 'ஸ்லீப் ஆப்னியா' பாதிப்புள்ளதா என்பதைக் கண்டறிய சில பரிசோதனைகள் செய்யப்படும். அவற்றில் முக்கியமானது பொலிசோம்னோகிராம் என்ற பரிசோதனை. ஒருவரின் தூக்கத்தின்போது அதனை ஆய்வுசெய்வதே இந்தப் பரிசோதனையின் முறை. அதன்படி, தூங்கும் முறை, குறட்டை ஒலி அளவு, சுவாசக் குழாயில் ஏற்படும் அசௌகரியங்கள், ஆழ்ந்த உறக்க நிலை உள்ளிட்டவை கண்காணிக்கப்படும். அதனடிப்படையில் பாதிப்பின் தீவிரம் அளவீடு செய்யப்படும்.

**தடுப்பு முறைகள்**

• உடல் எடையை சரியாக வைத்திருத்தல் • இரவுநேரங்களில் சரியான நேரத்தில் தூங்குதல் • மது, புகைப்பழக்கங்களைத் தவிர்த்தல் • உடற்பயிற்சி • துரித உணவுகளைத் தவிர்த்தல் • அதிகளவு மருந்துகளை எடுத்துக்கொள்ளாமல் இருத்தல் • ஆரம்ப நிலை பரிசோதனை மற்றும் சிகிச்சை.

# ஆப்கானிஸ்தானில் கடும் மழை - வெள்ளம்

## 9 குழந்தைகள் உட்பட 39 பேர் பலி



ஆப்கானிஸ்தானில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 9 குழந்தைகள் உட்பட 39 பேர் உயிரிழந்துள்ளதுடன், 14 பேர் படுகாயமடைந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

நாட்டின் கிழக்குப் பகுதிகளில் ஒரு மாதத்திற்குள் 3ஆவது முறையாகவும் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

மண்சரிவுகளின்போது 40 ஆண்டுகால போர் மற்றும் தாக்குதல்களின்போது வெடிக்காத கண்ணிவெடிகள் வெளிப்பட்ட நிலையில், அவை பாதுகாப்பாக அகற்றப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வெடிக்கச் செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் கேட்பாரற்று கிடக்கும் சோழர் கோவில்

## மீட்க வேண்டும் என்கிறார் பொன்மாணிக்கவேல்





இலங்கை மற்றும் கர்நாடக மாநிலத்தில் கேட்பாரற்று கிடக்கும் கலைப் பொக்கிஷங்களை மீட்க வேண்டும் என மத்திய, மாநில அமைச்சர்களுக்கு ஓய்வுபெற்ற ஐ.ஜி. பொன்மாணிக்கவேல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

இலங்கையை 78 ஆண்டுகளுக்கும் மேலாக சோழ மன்னர்கள் ஆட்சிசெய்துள்ளனர். அதற்கு சான்றாகவுள்ள அந்நாட்டில் உத்தம சோழீஸ்வரனின் மகாதேவர் கோவில், கேட்பாரற்று கிடக்கிறது. இது, 1009இல் கட்டப்பட்டுள்ளது.

இக்கோவிலில் மிகப்பெரிய கருங்கல் தூண் உள்ளது. இதில், தமிழின் பழைமையான வட்ட எழுத்துகளில் இராஜராஜசோழன் இலங்கையை ஆண்டதற்கான குறிப்புகள் உள்ளன. அந்நாட்டிற்கு நிகரி சோழ மண்டலம் என்ற பெயரையும் சூட்டியுள்ளார். மேலும் இக்கோவிலுக்கு 21 ஏக்கர் நிலம் தானமாக கொடுக்கப்பட்டுள்ளது.

**கலைப் பொக்கிஷம்**

இந்நிலத்தின் வருமானத்தில் கோவில் பராமரிக்கப்பட வேண்டும் என்ற குறிப்பும் உள்ளது. நான் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவில் பணிபுரிந்தபோது, வெளிநாடுகளில் உள்ள கலைப் பொக்கிஷங்கள் குறித்து ஆய்வு செய்தபோது, இலங்கையில் சோழ மன்னர்களால் கட்டப்பட்ட கோவில்களில் கலைப் பொக்கிஷங்கள், நம் மன்னர்களின் சிறப்புகளை கூறும் கல் தூண்கள் இருப்பது தெரியவந்தது.

கோவில் சிதைக்கப்பட்டு, இப்பொருட்கள் கேட்பாரற்று கிடக்கின்றன. நம் மன்னர்களின் ஆட்சித் திறனை பறை சாற்றும் கலைப் பொக்கிஷத்தை மீட்க வேண்டும்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுச் சொத்துகளை சேதப்படுத்துவதையும் வன்முறையையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வேண்டுகோள்

நெருக்கடியான இந்தச் சூழலில் நாட்டு மக்களை அமைதியாக செயற்பாடுமாறும் பொதுச்சொத்துகளை சேதப்படுத்துவதையும் வன்முறையையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் வேண்டிக்கொள்வதோடு, அரசியல் தலைமைகள் காலதாமதமின்றி நாடாளுமன்றத்தைக் கூட்டி, அரசியல் ஸ்திரத்தன்மையை நாட்டில் ஏற்படுத்துமாறும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வேண்டுகோள் விடுப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது நம் நாட்டில் அமைதியற்ற ஒரு நிலை ஏற்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஜனநாயக ரீதியான இந்த மக்கள் போராட்டத்தை தீய சக்திகள் பிழையான திசைக்கு இட்டுச்செல்வதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

அந்தவகையில், நம் நாட்டு மக்கள், குறிப்பாக, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர், எப்போதும் அமைதியான முறையிலும் ஜனநாயக விழுமியங்களைப் பேணியும் நாட்டு சட்டத்தை மதித்தும் பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையிலும் வன்முறையில் ஈடுபடாமலும் தம் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் நாட்கள் மிக முக்கியமான நாட்களாக காணப்படுவதால் நாட்டில் அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மை ஏற்படும் வரையில் மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் தத்தமது மத விழுமியங்களைப் பேணியும் வன்முறையைத் தவிர்த்தும் செயற்படுமாறும் அனைவரிடமும் அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

பௌத்த உயர்பீடங்கள் கோரியிருப்பது போன்று, அரசியல் தலைவர்கள் கால தாமதமின்றி நாடாளுமன்றத்தை கூட்டி, மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வழங்குவதன் ஊடாக அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையை நாட்டில் ஏற்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அத்துடன், இக்கட்டான இச்சந்தர்ப்பத்தில் அரசியல் தலைமைகள் கட்சி முரண்பாடுகளையும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையும் களைந்து, நாட்டின் எதிர்காலத்தையும் சுபிட்சத்தையும் கவனத்திற்கொண்டு செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

# சட்டவிரோதமாக டீசல் கடத்திய ஐவர் கைது

## கேகாலையில் 5,945 லீற்றர் மீட்பு

கேகாலை நகரில் பொலிஸார் நடத்திய விசேட வாகன சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் டீசல் கடத்திய ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து ஐயாயிரத்து 945 லீற்றர் டீசல் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலை நகரில் கடந்த 12 ஆம் திகதி இரவு நடத்திய சோதனை நடவடிக்கையின் போது லொறியொன்றில் டீசல் ஏற்றிச்சென்ற மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் அவர்களிடமிருந்து மூவாயிரம் லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்கள் பாணந்துறை, கணேமுல்ல, மொரட்டுவை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் அதிகாலை லொறியொன்றில் இரண்டாயிரத்து 945 லீற்றர் டீசல் ஏற்றிச்சென்ற இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் பொல்கஹவளை பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவங்கள் தொடர்பில் கேகாலை பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முதல் ஆறு மாதங்கள் இடம்பெற்ற விபத்துகளில் 1,459 பேர் உயிரிழப்பு

நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகள் காரணமாக ஆயிரத்து 459 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஜனவரி முதலாம் திகதிமுதல் ஜூலை முதலாம் திகதிவரையான காலப்பகுதியில் இந்த விபத்துகள் பதிவாகியுள்ளன.

மேலும், 1,387 பாரிய வீதி விபத்துகளில் 1,459 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துகளில் 3,326 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

இந்த காலகட்டத்தில், 4,309 சிறு விபத்துகளும், 2,229 விபத்துகளில் சொத்துகளுக்கான சேதங்களும் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த நாட்களில் திடீரென வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறைந்ததினால் விபத்துகள் மிகக் குறைவாகவே காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் பெற சென்ற நபர் சடலமாக மீட்பு

(ஜூட் சம்ந்த)

எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்துவிட்டு மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்த மோட்டார்சைக்கிள்களை பழுதுபார்க்கும் நபரொருவர் வடிகாலமைப்பின் கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம், ரபேபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய பிரசாந்த பெர்னாண்டோ என்பவரே இவ்வாற உயிரிழந்துள்ளார்.

மோட்டார்சைக்கிள் திருத்தப் பணியில் ஈடுபட்டு இவர் தனது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்துள்ளார். அதேபோன்று தனது தொழிலுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக சைக்கிளுக்கு எரிபொருள் கலனொன்றை பொருத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் (13) எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக சைக்கிளில் சிலாபம் நகரத்துக்கு வருகை தந்துள்ளார். இருந்தபோதிலும் எரிபொருள் கிடைக்காததால் மீண்டும் வீட்டுக்குத் திரும்பியுள்ளதுடன் இடையில் சிலாபம், முன்னேஸ்வரம் வீதியிலுள்ள வடிகாலமைப்பின்கீழ் விழுந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி காலை இனந்தெரியாத நபரொருவரின் சடலமொன்று வடிகானுக்கு கீழே கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதற்கமைய, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் உயிரிழந் தவரின் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த வடிகாலமைப்பின் அருகில் உயிரிழந்தவரின் எரிபொருள் கலன் பொருத்தப்பட்ட சைக்கிள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் ஏதாவது நோயினால் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. மரண பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதுடன் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சர்வதேச குர்ஆன் ஓதல் போட்டியில் இலங்கை மாணவிக்கு நான்காமிடம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)



வெண்ணவத்தை, வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த செல்வி மொஹமட் நுஹுமான் ஹசீபா மார்ச் 2022இல் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் அரசால் நடத்தப்பட்ட பெண் மாணவர்களுக்கான 7ஆவது சர்வதேச குர்ஆன் ஓதல் போட்டியில் 4ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

மாணவியின் வெற்றியை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஈரான் தூதரகத்தின் கலாசார நிலையத்தினால் அதன் கவுன்சிலர் கலாநிதி பி. மொஸாமி குதர்சி, மாணவிக்கு நினைவுச் சின்னத்தையும், சான்றிதழையும் வழங்கி கௌரவித்துள்ளார்.

செல்வி ஹசீபா அல்-ஹபிஸா புனித



குர்ஆனை முழுமையாக மனனம் செய்தவர். அத்துடன் 2019, 2020, 2021ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கிராத் போட்டியில் 1ஆவது இடத்தையும் சுவீகரித்து வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளார்.

மாணவியின் வெற்றியை அறிந்து முஸ்லிம் சமய கலாசார விவகார திணைக்களத்தின் சார்பாக பணிப்பாளர் இப்ராஹிம் அன்சார், சாதனையாளரின் தந்தை அல்-காரி உஸ்தாத் முஹம்மட் நுஹுமான் அதாஸுடன் திணைக்களத்திற்கு வருகை தந்தபோது அவரின் மாபெரும் சாதனைக்காக அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இதன்போது உதவிப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.அன்வர் அலியும் பங்கேற்றிருந்தார். இணையத்தளம் ஊடாக இடம்பெற்ற இப்போட்டியில் இவர் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் ஹெரோயினுடன் நபரொருவர் கைது





பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த நபரொருவரை பேருவளை கரையோரக் காவல் நிலையத்தில் கடமையாற்றும் கரையோரப் பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அண்மையில் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து 440 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் (17 சிறிய பக்கெட்டுகள்) மற்றும் 12 ஆயிரம் ரூபா பணம் என்பன கடலோரப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

அவர்கள், அந்தப் பகுதி மீனவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்பவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் பணம் என்பவற்றுடன் மேலதிக விசாரணைகளுக்காக பேருவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# அனுமதிப்பத்திரமின்றி எரிபொருள் ஏற்றிச்சென்ற நால்வர் கைது

அனுமதிப்பத்திரமின்றி இரு லொறிகளில் எரிபொருளை ஏற்றிச்சென்ற சந்தேகநபர்கள் நால்வர் கேகாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கேகாலை பொலிஸ் பிரிவில் கடந்த 12ஆம் திகதி அனுமதிப்பத்திரமின்றி 3 ஆயிரம் லீற்றர் டீசலை பீப்பாய்களில் நிரப்பி லொறிகளினூடாக கொழும்புக்கு ஏற்றிசென்ற சந்தேகநபர்கள் இருவர் கேகாலை பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள் மற்றும் கேகாலை வலய போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கேகாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திர மின்றி நேற்று முன்தினம் (13) 2 ஆயிரத்து 945 லீற்றர் டீசலை பீப்பாய்களில் நிரப்பி லொறியொன்றினூடாக பொல்கஹாவெல பிரதேசத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மேலும் சந்தேகநபர்கள் இருவர் கேகாலை குற்றவிசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு கேகாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறை, மொரட்டுவை, கனேமுல்ல மற்றும் பொல்காவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 41, 43, 44 மற்றும் 47 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டள்ளனா்.

இந்த சந்தேகநபர்கள் கேகாலையிலிருந்து கொழும்பு வரையிலான மாற்று வீதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருள் வரிசையில் இருந்த நபர்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொடுக்கப்பட்டதன் பின்னர் இரவு நேரங்களில் எரிபொருள் தீர்ந்து விட்டதாக தெரிவித்து குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை மூடிவிட்டு இரு லொறிகளில் வந்து இந்த எரிபொருள் பெறறுக்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் நேற்று கேகாலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனா்.

# கோட்டாவால் இனி ஓடி ஒளிய முடியாது

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பயணம் செவ்வாய் கிரகத்திலா முடிவுக்கு வருமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கேள்வி எழுப்பி யுள்ளார்.

இலங்கையர்கள் இருக்கும் எந்த நாட்டுக்கும் கோட்டாபய செல்ல முடியாது. பதவி விலகல் கடிதத்தை அனுப்ப ஜனாதிபதி ஏன் காலந்தாழ்த்தி வருகிறார். கோட்டாபய ராஜபக்ஷ



மக்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள எந்த வழியும் இல்லை. இலங்கையர்கள் இருக்கும் எந்த நாட்டுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு செல்ல முடியாது.

அண்டவெளியில் வேறு கிரகத்தை தேடுவதன் காரணமாகவே ஜனாதிபதி பதவி விலகல் கடிதத்தை அனுப்ப தாமதித்து வருகின்றாரோ என்ற நியாயமான சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கப்பூருக்கு சென்ற பின்னர் அங்கிருந்து தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்புவார் என கூறப்பட்டிருந்தது. எனினும், ஜனாதிபதி சிங்கப்பூர் செல்வது தாமதமாகியுள்ளது. சிங்கப்பூர் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தில் ஜனாதிபதி மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் புறப்படவிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் - இராணுவத் தளபதி சந்திப்பு





இலங்கைக்கான பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாரூக் புர்கி, ஹிலால்-இ-இம்தியாஸ் அண்மையில் இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். நடந்த சுமூகமான கலந்துரையாடல்களின் போது, இரு நாடுகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக நிலவிவரும் நட்பு மற்றும் நல்ல உறவுகளையும், குறிப்பாக, பல்வேறு பயிற்சி நிகழ்வுகள், ஆயுதப்படைகளின் பங்கேற்பு மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பரிமாற்றத் தொகுதிகள் தொடர்பான தற்போதைய பரிமாற்றுத் திட்டங்களையும் இருவரும் நினைவுகூர்ந்தனர்.

லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, இலங்கைக் கான புதிய உயர்ஸ்தானிகரின் நியமனம் குறித்து மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்த பின்னர், அவருக்கு சிறந்த ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தார். நினைவுச்சின்னங்கள் பரிமாற்றத்துடன் இச் சுமூக சந்திப்பு நிறைவுற்றது.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் முஹம்மது சப்தாரும் மரியாதை நிமித்தமான இச்சந்திப்பில் இணைந்துகொண்டார்.

# யூரியா உர விநியோக நடவடிக்கைகள் ஆரம்பம்

நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ள 40 ஆயிரம் மெட்ரிக்தொன் யூரியா உரத்தை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பொலன்னறுவை மாவட்டத்தின் புதிய நகரம், கல்அமுன ஆகிய பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் (13) யூரியா உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்று முன்தினம் 335 விவசாயிகளுக்கு ஆயிரம், 50 கிலோ கிராம் உர மூடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்றைய தினம் பொலன்னறுவை விவசாயிகளுக்காக இந்த யூரியா உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களுக்கும் இந்த உரத்தொகை விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.





# ஆஸி. உடனான வெற்றிப் பயணத்தை பாகிஸ்தானுடன் தொடருமா இலங்கை அணி?





**ஏ.அகீல் சிஹாப்**

பாபர் அஸாம் தலைமையிலான சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான இரு போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதல் போட்டி நாளை காலை 10.00 மணிக்கு காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இலங்கை அணி முன்னதாக ஆஸி. அணியுடன் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி தொடரை 1-1 என்ற அடிப்படையில் சமநிலை செய்திருந்தது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அபார வெற்றிபெற்ற உத்வேகத்துடன் நாளை பாகிஸ்தானை எதிர்கொள்கிறது இலங்கை அணி.


**ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்**

சர்வதேச கிரிக்கெட் பேரவை யானது டெஸ்ட் போட்டிகளுக்கும் ஒரு சம்பியனை தீர்மானிக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் 'ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்' என்ற பெயரில் ஒரு தொடர் கடந்த 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது இரண்டு வருடங்களில் நடைபெறுகிறது.

இரண்டு வருடங்களில் நடைபெறுகின்ற டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகி, அந்த இரு அணிகளுக்கிடையில் நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை சுவீகரிக்கும். முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூஸிலாந்து அணி சுவீகரித்தது.

**மூன்றாமிடத்தில் இலங்கை அணி**

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக நடைபெறுகின்ற குறித்த டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணி 8 போட்டிகளில் விளையாடி 4 வெற்றிகளையும், 3 தோல்விகளையும், ஒரு வெற்றி தோல்வியற்ற முடிவையும் சந்தித்து, 54.17 சதவீத வெற்றியுடன் மூன்றாவது இடத்தில் காணப்படுகிறது.




மறுமுனையில் பாகிஸ்தான் அணி 7 போட்டிகளில் விளையாடி 3 வெற்றிகள், இரு தோல்விகள், இரு வெற்றிதோல்வியற்ற முடிவுகளுடன் 52.38 சதவீத வெற்றியுடன் 44 புள்ளிகளை பெற்று நான்காமிடத்தில் காணப்படுகிறது.

**இலங்கை எதிர் பாகிஸ்தான்**

2021 - 2023 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் நாளை இலங்கை அணி, பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கின்ற நிலையில், இரு அணிகளுக்குமிடையில் இதுவரையில் நடைபெற்றுள்ள டெஸ்ட் போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

**இதுவரையில் நடைபெற்ற போட்டிகள்**

கடந்த 1982ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் வரலாற்று சிறப்புமிக்க முதல் டெஸ்ட் போட்டி கராச்சியில் நடைபெற்றது. குறித்த போட்டியில் பாகிஸ்தான் அணி 204 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்றது. அன்றிலிருந்து இன்றுவரையில் இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் 55 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி 20 போட்டிகளில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தும் நிலையில், இலங்கை அணி 16 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. 19 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சமநிலை யில் நிறைவடைந் துள்ளன.

**இறுதி ஐந்து போட்டிகள்**

இரு அணிகளுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற 5 டெஸ்ட் போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது, இலங்கை அணி இரு போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் நிலையில், பாகிஸ்தான் அணி இரு போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவுக்கு வந்தது. இலங்கை அணி 2017ஆம் ஆண்டு பெற்ற வெற்றியின் பின்னர் பாகிஸ்தான் அணியுடன் 5 வருடங்களாக டெஸ்ட் வெற்றியை சுவைக்கவில்லை.

**மீண்டும் டெஸ்ட் சம்பியன்ஷிப் மோதல்**

முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் கடந்த 2019ஆம் டிசம்பரில் இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

குறித்த தொடரை பாகிஸ்தான் அணி 1-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இந்நிலையில் தற்போது நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை – பாகிஸ்தான் அணிகள் மீண்டும் மோதுகின்றன.

**இருதரப்பு டெஸ்ட் தொடர்கள்**

கடந்த 1982ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 20 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி 9 தொடர்களை வென்றுள்ள நிலையில், இலங்கை அணி 6 தொடர்களை வென்றுள்ளது. 5 தொடர்கள் வெற்றிதோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளன. இலங்கை அணி கடந்த 2017ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதன் பின்னர் இதுவரையில் தொடரைக் கைப்பற்றவில்லை. எனவே ஆஸி. அணியுடன் பெற்ற வெற்றி பாகிஸ்தான் அணியுடன் தொடருமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

## ரொனால்டோ விற்பனைக்கு இல்லை

*(ரமணி)*

கிறிஸ்டியானோ ரொனால்டோ விற்பனைக்கு இல்லை என்று மான்செஸ்டர் யுனைடெட் மேலாளர் எரிக் டென் ஹாக் கடந்த திங்களன்று தெரிவித்தார். மான்செஸ்டர் யுனைடெட் தாய்லாந்தில் ஒரு முன்சீசன் சுற்றுப்பயணத்திற்காக உள்ளது, ஆனால் 37 வயதான முன்கள வீரர், கிளப்பில் அவரது எதிர்காலம் குறித்த சந்தேகங்களுக்கு மத்தியில், குறிப்பிடப்படாத குடும்பப் பிரச்சினை காரணமாக பயணத்தை மேற்கொள்ளவில்லை.



அவர் எங்களுடன் இல்லை, தனிப்பட்ட பிரச்சினைகளே அதற்கு காரணமாகும் என்று டென் ஹாக் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கூறினார். இந்த சீசனுக்காக கிறிஸ்டியானோ ரொனால்டோவுடன் நாங்கள் திட்டமிட்டுள்ளோம், அவ்வளவுதான். அவருடன் பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன் என்றார்.

இதை அவர் என்னிடம் சொல்லவில்லை. நான் படித்தேன். ஆனால், கிறிஸ்டியானோ என்று நான் சொல்வது விற்பனைக்கு இல்லை, என்று டென் ஹாக் கூறினார். கிறிஸ்டியானோ எங்கள் திட்டங்களில் இருக்கிறார், நாங்கள் ஒன்றாக வெற்றிபெற விரும்புகிறோம்.

ரொனால்டோ ஓல்ட் ட்ராஃபோர்ட்டில் இருந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த சீசனில் யுவென்டஸிலிருந்து யுனைடெட் திரும்பினார், ஆனால், அந்த அணி ஆறாவது இடத்தைப் பிடித்தது மற்றும் மிகவும் மதிப்புமிக்க சம்பியன்ஸ் லீக்கிற்குப் பதிலாக யூரோபா லீக்கிற்கு மட்டுமே தகுதிபெற்றது. யுனைடெட் தனது சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக அவுஸ்திரேலியாவிற்கும் செல்லவுள்ளது.

## முதல் முறையாக அணித்தலைவரான ஹஸரங்க

**2022 எல்.பி.எல். தொடரில் கண்டி ஃபால்கன்ஸ் அணியின் தலைவராக நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் வனிந்து ஹஸரங்க நியமிக்கப்பட்டுள்ளார். கண்டி வோரியர்ஸ் என கடந்த ஆண்டு பெயரிடப்பட்டிருந்த இந்த அணி, தற்போது கண்டி ஃபால்கன்ஸ் என புதிய பெயருடன் விளையாடவுள்ளது.**

**வனிந்து ஹஸரங்க முதன்முறையாக தொழில்முறை லீக் போட்டியில் பங்கேற்கும் அணியொன்றின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வனிந்து ஹஸரங்கவை எமது அணியின் தலைவராக நியமிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இவருக்கு டி20 சர்வதேச அனுபவம் உள்ளது. அவர் சிறந்த பணியை செய்வார் என நான் நம்புகிறேன் என கண்டி ஃபால்கன்ஸ் அணியின் உரிமையாளர் பர்வெஷ் கான் தெரிவித்தார்.**

**மூன்றாவது எல்.பி.எல். தொடர் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 21ஆம் திகதி வரை கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானம் மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில் நடைபெறுகிறது.**



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## யூரோ வரலாறு படைத்த இங்கிலாந்து அணி



மகளிருக்கான யூரோ உதைபந்து தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்து, தனது 2ஆவது ஆட்டத்தில், இரு முறை சம்பியனான நோர்வே அணியை எதிர்த்து விளையாடியது. கடந்த திங்கட்கிழமை பிரைட்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், இங்கிலாந்து மகளிர் அணி 8-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யூரோ வரலாற்றில் ஆடவர், மகளிர் என எந்த ஒரு ஆட்டத்திலும் இதற்கு முன்னர் 8 கோல்கள் அடிக்கப்பட்டது இல்லை. அந்த வகையில் இங்கிலாந்து அணி வரலாறு படைத்துள்ளது. அந்த அணி தரப்பில் பெத் மீட் 34, 38 மற்றும் 81ஆவது நிமிடங்களில், எலன் ஒயிட் 29 மற்றும் 41ஆவது நிமிடங்களில், ஸ்டான்வே 12ஆவது நிமிடம், ஹெம்ப் 15ஆவது நிமிடம் ஆகியவற்றில் கோல் அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.

## பாகிஸ்தானை எதிர்கொள்ளும் இலங்கை டெஸ்ட் குழாம் அறிவிப்பு



சுற்றுலா பாகிஸ்தான் அணியுடனான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை காலியில் ஆரம்பமாகும் நிலையில், குறித்த தொடருக்கான 18 பேர் கொண்ட இலங்கை குழாம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட இலங்கை குழாத்தில், அவுஸ்திரேலிய தொடரிலிருந்து பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான குழாத்தில் இணைக்கப்பட்டிருந்த துனித் வெல்லாலகே, மஹீஷ் தீக்ஷன மற்றும் பிரபாத் ஜயசூரிய ஆகியோர் பாகிஸ்தான் அணியுடனான தொடரில் தங்களுடைய இடங்களை தக்கவைத்துள்ளனர்.

**இலங்கை குழாம்**

திமுத் கருணாரத்ன (தலைவர்), பெத்தும் நிஸ்ஸங்க, ஓசத பெர்னாண்டோ அஞ்சலோ மெத்யூஸ், குசல் மெண்டிஸ், தனஞ்ஜய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, தினேஷ் சந்திமால், ரமேஷ் மெண்டிஸ், மஹீஷ் தீக்ஷன, கசுன் ராஜித, விஷ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ, டில்ஷான் மதுசங்க, பிரபாத் ஜயசூரிய, துனித் வெல்லாலகே, ஜெப்ரி வெண்டர்சே.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7